உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 4. } 1905 ஹு டிசப்பர்மீ { புத்தகம் 12.

நமது பாநு.

சர்வதயாபரராகிய கடவுள் கருணையால் பாநு தனது 4-வது ஆண்டு நிறையப்பெற்றது. இதுகாறும் யாதோர் இடையூறுமின்றி நடைபெறப் புரிந்த பரமபதியின் பேரருள் விலாசத்தை மனங் கொண்டு, விஷயதானம் புரிந்து வந்த கல்விமான்களுக்கும், நன்கொடை யுதவி ஊக்கமூட்டிய உதாரசீலர்கட்கும், அன்புகூர்ந்து பத்திரிகையை யேற்றுச் சந்தாப்பொருளுதவி வளர்த்து வந்த அபிமானிகட்கும், அவ்வப்போது தத்தம் பத்திரிகைகளை யனுப்பிவந்த ஏனை பத்திராதிபர்கட்கும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம். பெரியார்கள் இனிமேலும் இவ்வாறே பேருதவி புரிவார்கள் எனுந்துணிவு கொண்டுள்ளேம்.

நமது தமிழ்நாட்டின்கணுள்ள தமிழ்ப்பத்திரிகைகளில் அரிய விஷயமும், எளிய நடையும், உருவவளர்ச்சியும், கொண்டு காலந்தவறாது வெளிவந்து ஜனரஞ்சிதம் புரியும் நமதுபாநுவைப்பற்றி தற்காலத்தில் நாகரீக முதிர்ச்சிபெற்றுச் சிறந்து விளங்கும் சுதேசமித்திரன், சுதேசி, முதலியதமிழ்ப்பத்திரிகைகளும், மிகப்பிரசித்திபெற்ற வித்வன்மணிகளும் பலவாறு அருமை பாராட்டிப் பேசியிருத்தல் யாவருமறிந்த விஷயமே.

நமது பாநுவின் அபிவிருத்தியை விரும்பி விஷயதானஞ் செய்தும், பரவுவித்தும், பொருளுதவியும், சற்போதனை புரிந்தும் பலவாற்றானுமெமக்குப் பெருந்துணை புரிந்து வரும் பல்லடம் தாசில்தார் ஸ்ரீமத் தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களின் பெருந்தகைமையை என்றும் மறவேம். இப்பரமோபகாரி நீடூழி வாழ்க.

பாநுவை நடாத்துந் தொழிலைக்கைக்கொண்டு 3வருஷகாலமாக எவ்வகையிடையூறுக்கு மஞ்சாது நின்று நடத்திவந்தே மாயினும் சந்தாதாருள்ளே பல்லோர் பிரசித்திபெற்ற பிரபுக்களாகவும், கௌரவம் படைத்தவர்களாகவும் தக்க உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் மட்டுமே இம்மூன்று வருஷ சந்தா பாக்கி வைத்திருக்கின்றனர். யாம் எழுதிய கடிதங்கட்கு விடை பகர்கின்றாரில்லை. இவருட் சில்லோர்ஒருமாதப் பத்திரிகை தவறினால் இன்ன பத்திரிகை வரவில்லை, அதையனுப்பவேண்டும் என்று எழுதுகின்றனர். இவர்கள் பொருள் கொடுக்க மறப்பினும் பத்திரிகை வரவையாவது கவனிப்பது பற்றி மகிழ்கின்றாம். மற்றுஞ் சிலர் அதுவுமிலர். வேறு சில்லோர் "எமக்கு இன்னமீ வரை சும்மா அனுப்புங்கள் அப்பால் வி. பி. போஸ்டிலனுப்பிச் சந்தாப்பொருள் பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கடிதமனுப்பி அவ்வாறு செய்யப்பெற்று வி, பி. அனுப்பியவுடன் தேவையில்லை என்று திருப்பிவிடுகின்றார். இங்ஙனமாக இதுகாறும் நமக்குப் பெரிதும் இடருறுத்திய பிரபுக்கள் பெயராதியவற்றைக் கூறினால் நம் தமிழ் நாட்டுக்கே யிழுக்காமென்றஞ்சி விடுக்கின்றோம்.

இவ்வாறான பொருள் நஷ்டம் இனிமேல் வராதிருப்பது கருதி அடுத்த ஐந்தாவது வால்யூம் தொடக்கமாகிய 1906ஆம் ஜனவரிமீ பத்திரிகையையே சந்தாதார் அனைவருக்கும் வி. பி. போஸ்டில் அனுப்புவதாக முடிவு செய்துள்ளோம். மிகக் குறைந்த சந்தாவாகிய இந்த இரண்டுரூ கொடுப்பது சந்தாதார்கட்குச்சுலபமே. ஆனால்எமக்கோ பலரால் பாக்கி நேரிட்டால் பெரிய நஷ்டமாகின்றது. இங்ஙனம் யாம் முதற்பத்திரிகையையே சந்தாத்தொகைக்கு வி. பி. செய்து விட்டால் எவ்வாற்றானும் எமக்கு நஷ்டமில்லை. சந்தாதார்க்கும் கஷ்டமில்லை. சந்தாதாருள்ளே பலர் எமக்கு நட்பாளரான தனிகர்களாயிருக்கின்றார்களாதலின் அவர்கள் தாம் சிரமப்பட்டு மணியார்டர் செய்யும் சிரமத்தை நீக்கினதைக் கவனிப்பார்களேயன்றித் தமக்கும் வி. பி. செய்வதா என்று சினங்கொள்ளார்களென நம்புகிறோம்.

திருநெல்வேலி, தூற்றுக்குடி, திண்டுக்கல் முதலிய சில இடங்களிலுள்ள சந்தாதார்களிடம் மார்ச்சு ஏப்பிரலுக்கு மேலுள்ள மா

சங்களில் ஆளனுப்பியே சந்தா வசூல் செய்து வருவது 3வருஷ வழக்கம். அதனால் எமக்குப் பெரிதும் சிரமமும் பொருள் நஷ்டமும் ஏற்பட்டதால் இவ்வருஷம் ஜனவரிமீ பத்திரிகையை எல்லோருக்கும் வி. பி. போஸ்டில் அனுப்ப நேரிட்டது. இந்நகரவாசிகள் பெரிதும் தயை கூர்ந்து பத்திரிகைச் சந்தாவை ஜனவரியிலேயே செலுத்திப் பெற்று ஆதரிக்கவேண்டுகிறோம்.

3 வருஷ பாக்கிதார்கட்கு அன்னார் பாக்கித்தொகையையும்சேர்த்தே வி. பி. செய்யலாகும். அவர்கட்குப் பத்திரிகை வேண்டாமென்றிருந்தால் தமது பாக்கியை அனுப்பிவிட்டுத் தம் அபிப்பிராயத்தை எமக்கறிவிக்கவேண்டியதே. யாம் கட்டாயம் செய்ய வரவில்லை. தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் உடையவர்களாகிச் சிரமப்படாது மனமுவந்து பொருளுதவிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும் சந்தாதார்கள் சிலரேயிருப்பினும் அவர்கள் உதவியை வைத்துக்கொண்டே பத்திரிகை நடத்தலாகும். பொதுவாக எல்லாச் சந்தாதார்களையும் யாம் வேண்டிக்கொள்வதாவது,

வருகிற 1906 ஆம் பாநுவை ஜனவரிமீ வி. பி. மூலம் பொருளுதவிப் பெறுதற்கு விருப்பமில்லாதவர்கள் ஜனவரிமீ 15உக்குள் தமதபிப்பிராயத்தை எமக்குத் தெரிவித்துவிடவேண்டும். யாம் வி. பி செய்தபின்பு திருப்பியனுப்பி எமக்கு நஷ்டமுண்டாக்கப்படாது.

இங்ஙனம்,

எம், ஆர். கந்தசாமிக்கவிராயர்,

புரோப்ரையிட்டர்.

532

வித்தை XVII

(முன் தொடர்ச்சி.)

‘கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி’ என்பதை நாம் ஒவ்வொரு நிமிஷமும் ஞாபகத்தில் வைக்க வேண்டுமென்று முன் சஞ்சிகையிற் கூறினோம். அக்கல்வியை ஜனங்களுட்பரவச் செய்வது இன்றியமையாதது. பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தால் மட்டும் போதுமானதாகாது. கல்வியைப் பரவச்செய்வதில் பல முறைகளை அனுசரித்தல் வேண்டும். முற்காலங்களில் கல்வியின் படனைத் தோட்டிமுதல் தொண்டமான்வரை அடைந்து வந்தார்கள். அக்காலத்து ஏற்பாடுகள் ஜனங்களுக்கு அநுகூலமாயிருந்தன. நம் தேசம் கிருஷித்தொழில் பரவிய தேசம். நூற்றுக்கு 75 பேர்கிருஷித்தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள். விடியற்கால முதல் அஸ்தமனம்வரை அத்தொழிலிலேயே காலத்தை செலவிட்டு வரும் குடிகளுக்குக் கல்வி கற்கச் சமயம் ஏது? ஆகையால் முற்காலத்தார் கல்வியறிவைப் பஜனைகள் மூலமாகவும், இதிகாச புராணபடன மூலமாகவும் இராக்காலங்களில் பரவச் செய்து வந்தனர். அறிவை யடைவதில் காண்காது இரண்டும் பெருங்கருவிகளாக உதவுகின்றன. சாமான்ய ஜனங்கள் தங்கள் காதினாலேயே பலவித அறிவை அடைந்து வந்தார்கள். செவிச் செல்வம் செல்வத்துள் எல்லாம் மேலானதன்றோ? “இளமையிற்கல்” என்று சொன்ன ஔவையார், பின் ‘கேள்வி முயல்’ என்று சொன்னதின் கருத்துயாதெனில் கற்பனவூழற்றார் கேள்வியாலாவது அறிவை யடையக் கடவர் என்பதாம். ஜனங்கள் நியாய அநியாயம், பாவ புண்ணியம் முதலிய தர்மாதர்மங்கள் இன்னவை யென்று அறிந்தால் உலகம் நடைபெறும். சண்டை சச்சரவுகளிரா. சத்தியமே பரவிக்காரியங்கள் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெறும் இதனாலேயே நம் இதிகாச புராணங்கள் தர்மங்களைப் பற்றி முக்கியமாய்ப் பேசுகின்றன. அவைகளைக் கேட்டுக் கேட்டு அறிவை யடைந்து அதர்மத்தை விலக்கித் தர்மத்தைப் பரிபாலனம் பண்ணி வந்தனர். கிருஷித்தொழில் செய்பவர்

களுக்கு இராக்காலமே சாவகாசமானது. அக்காலத்தில் அவர்கள் ஆர அமர உட்கார்ந்து காதாரத் தர்மங்களைக் கேட்டும் வாயாரக் கடவுளை வாழ்த்தியும் தன்மையை விருத்தி பண்ணி வந்தார்கள். சாமான்ய ஜனங்களும் தினே தினே இம்மாதிரியான தர்மங்களைக் கேட்கும்படியான ஏற்பாடுகளை நம்முன்னோர்கள் செய்து வந்திருந்தார்கள் அப்படிப் பட்ட ஏற்பாடுகளை ஜனங்கள் ஆதரித்துப் பயனடைந்து வந்தார்கள். அசோக அரசன் இம்மாதிரியான நீதி முறைகளைச் சில ஸ்தம்பத்தில் எழுதிப் பகிரங்கமான இடங்களில் நட்டி வைத்தான். இம்மாதிரியாக அறிவைப் பரவச்செய்வதில் பல முயற்சிகளைக் கைக்கொண்டார்கள். சாமான்ய பிச்சைக்காரர்களும் ஞானப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டு பிச்சை எடுப்பார்கள். தெருக்களில் இப்பொழுதும் பாகவதக் கதைகளையும் பாரதக்கதைகளையும் இரண்டு ஸ்திரீகள் ஒருவர்மாற்றி ஒருவர் சொல்லிக் கொண்டு நம் வீட்டு வாசல்களில் பிச்சைக்கு வருகிறார்களே. அவர்கள் பாடும் பாடல்கள் செவிக்கினிமையாகவும் மனத்துக்கு இரம்மியமாகவும் இருக்கவில்லையா? அப்படிப் பட்டவர்களும் வரவரக்குறைகிறார்கள். ஜனங்களும் வரவர அவைகளைக் கேட்டு ஆனந்தித்து அறிவை யடைந்து அவர்களுக்குச் சிறிது உபகாரம் செய்வதை விட்டு அப்படிப் பட்டவர்களை வெறுக்கிறார்கள். தெருக்கள்தோறும் பகவத்கீதை ஸ்லோகங்களும் திருவாய் மொழி பிரசுரங்களும் நந்தன் சரித்திரக் கதைகளும் தாயுமானசுவாமிகள், பட்டணத்தார் இவர்கள் பாடல்களும் செவிடுபடும்படி கோஷிக்குமே. அவைகளெல்லாம் அரிதாய் விட்டன. ஜனங்களுடைய ஆசை அதிரிக்கவே தர்மங்கள் குறைந்து விட்டன. தர்மங்கள் குறையவே அறிவைப் பரவச் செய்வோரும் குறைந்தார்கள். அவர்கள் குறையவே நம் ஜனசமூகத்துக்குள்ள ஆனந்தமும் சந்தோஷமும் குறைவுபடத் தொடங்கின. சுகுணங்கள் பலவும் நம் நாட்டைத்துறக்க ஆரம்பித்தன. ஜீவகாருண்யம் என்பது அடியோடே தொலையத் தொடங்கிற்று. அதிதிபூஜை அடியோடே அற்றுப் போயிற்று, சுயநயமேஎங்கும் மேலிட்டது. அத்துர்க்குணத்துக்கு வசப்பட்டவர்களாய் அந்நியர்களைக் கெடுத்து வாழத் தொடங்கினோம். ஆகையால் அறிவைப் பரவச் செய்ய நாம்மீண்டும் முயலவேண்டும். எழுதப் படிக்க முயலல் உண்மையான அறிவாக

மாட்டாது. அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல் என்றபடி தர்மாதர்மங்களை அறிந்து அடங்கி வாழச் செய்வதற்கே நாம் முயல வேண்டும். நம் இராஜாங்கத்தாரும் "கெக்குக்கு ஒன்றேமதி" யென்றிராமல் பலவகையிலும் அறிவைப் பரவச் செய்ய வழிதேட வேண்டும். பாடசாலைகள் ஏற்படுத்தி அவைகளால் மட்டும் முக்கியமாய் அறிவு பரவும்படியான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கண்காட்சி சாலை ஏற்படுத்தி அதிலுள்ள பொருள்களைக் கண்டு களித்து அறிவை அடையும்படி செய்திருக்கிறார்கள். இவைமட்டும் போதா. முற்காலம்போல் ஊரூராய்த் தெருத்தெருவாய் வீடுவீடாய் அறிவைக் கொண்டுபோக வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். சில்லரை வியாபாரிகள் சாக்குகளை ஜனசௌகரியங்களின் பொருட்டு வீடுவீடாய்க் கொண்டு போய் அவைகளைச் சொற்பலாபத்துக்கு விற்று இருவர் சுகத்தையும் விருத்தி பண்ணுவதுபோல் அறிவையும் வீடுவீடாய்க் கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். பாதிரிமார்கள்பெண்கல்வியைப்பரவச்செய்வதற்கு ஸ்திரீகளை நியமனம்செய்து போதிக்கச்செய்து வரவில்லையா? தங்கள்மதங்களை அபிவிருத்திபண்ணச் சிறுபுத்தகங்களும் துண்டுப்பத்திரிக்கைகளும் போட்டு இனாமாகத்தந்து படாதபாடெல்லாம் பட்டுவருகிறதை நாம்தினந்தோறும் பார்த்துவருகின்றோமே. அவர்கள்பிரசங்கிகளைநியமனஞ்செய்துபிரசங்கங்கள்மூலமாகஅறிவைப்பரவச்செய்யவில்லையா? விநோதக்காட்சிக்கண்ணாடிகள்மூலமாய் எத்தனையோ ஜனங்களின் அக இருளை நீக்கிவருகிறார்களே. இவ்விதமான சாதனங்களை ஏன் நம்வித்தியா இலாகாதாரும், லோக்கல்பண்டுபோர்டாரும் கைக்கொண்டு அறியாமையென்னும் அந்தகாரத்தை நீக்கக்கூடாது. இவைகளெல்லாம் சுலபமான சாதனங்கள் அல்லவோ? ஜனங்களுக்குள் உண்மையாகவே அறிவி பரவ வேண்டுமானால் இம்மாதிரி முறைகளே வெகுவாய்க் கைக்கொள்ளத் தக்கன. ஒருநாட்டு வழக்கை மற்றொரு நாட்டுக்குப் பொருத்துதல் ஏலாது. அவ்வவ் நாட்டு வழக்கங்களை அனுசரிப்பதுடன் அந்நிய நாட்டு வழக்கங்களையும் இயன்ற மட்டும் பொருத்தவேண்டும். மதவிஷயமே கல்வியறிவை அதிகம் பரவச்செய்யும். நம் கவரன்மெண்டார் தாங்கள் மதவிஷயத்தில் தலைப்படாவிட்டாலும் அந்தந்த மதஸ்தர்களைக் கொண்டு அந்த

ந்த மதத்துக்குரிய அறிவைப் பரவச் செய்ய ஏற்பாடு பண்ணினால் நலமாயிருக்கும். அவ்விஷயத்தில் இராஜாங்கத்தாரை நாம் எதிர் பார்ப்பதிலும் நாமே ஏற்பாடு பண்ணிக்கொள்ளுதல் மிக்கநலமாம். ஆகையால் இனியாவது நம்மவர் தூக்கத்தை யொழித்து ஜன அறிவு அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாயிருந்து தேச க்ஷேமத்தை நாடுவார்களாக. அறிவின் ஆனந்தமே ஆனந்தம். மற்றவையெல்லாம் போலி ஆனந்தமாம். இராஜாங்கத்தார் செய்யும் கடமைகளுடன் நாமும் நம் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். அவைகளைப் பற்றி அடுத்த முறை எழுதுவோம்.

பத்திராதிபர்.

கொழுவும் துன்னூசியும்.

தமிழ் இலக்கண நூற்பயிற்சியுடையார் யாவர்க்கும் பாயிரங்கற்குங்கால் "கொழுச்சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறுபோல" என்ற வாசகம்புலப்படும். இத்தொடர்மொழியை முதலிலெடுத்துக் கூறியவர் நக்கீரனாரேயாம். இதன் பொருள்யாது என்பதை ஆராய்வாம். நக்கீரனாரால் கூறப்பட்ட இத்தொடர்மொழிக்குப் பொருளின்னதென்று இதுகாறும் வரையறை செய்தாரெவருமிலர். ஆயினும் தமிழ்ப்புலவருட் பெரும்பாலார் கொழுவென்பது கலப்பையின் கொழுவெனவும், துன்னூசியென்பது கலப்பையின் ஓர் உறுப்பு எனவும் கூறி வருதல் வழக்கு.

துன்னூசியென்பது கலப்பையின் ஓர் உறுப்பு அல்லது ஓர் பாகம் என்னும் பொருள்தருவதாக நிகண்டு பிங்கலந்தை திவாகரம் முதலிய நூல்களுள் யாண்டுங்கண்டபாடில்லை. அன்றியும் புலவர் பெருமானாகிய கம்பநாட்டாழ்வார் பாடிய ஏரெழுபது என்றநூலுள் கலப்பையின் உறுப்புக்களாகிய அலப்படை மேழி, ஊற்றாணி, நுகத்தடி, நுகத்துளை, நுகத்தாணி, பூட்டாங்கயிறு, தொடைக்கயிறு கொழு, கொழுவாணி, தாற்றுக்கோல் என்பவற்றைப்பற்றித் தனித்

தனி சிறப்பித்துப்பாடியிருத்தலின், துன்னூசியென்பது ஓர்உறுப்பாயின் இதனையும் சிறப்பித்திருப் பாரேயன்றி விட்டிருக்கமாட்டார் என்பது துணிவு. மேற்கூறியஉறுப்புக்களுள் ஒன்றின்பரியாயமாய்ப் பேராகக்கொள்ளற்கும் இடமில்லை. யாண்டும் வழங்கப்பெறாமையின். ஆகவே, துன்னூசி என்பதற்குக் கலப்பையின் ஓர் உறுப்பென்னும் பொருள் நிலைபெற்றதில்லை. மற்றொருசாரார் கொழுவென்பது கலப்பையின் கொழுவேயெனவும், துன்னூசி யென்பது தைக்கிறஊசியே யெனவும் கொண்டு பெரிதாகிய கொழுச்சென்ற வழியில் சிறிதாகிய ஊசி செல்லுதலெளிதாமாறுபோல எனப்பொருள் கூறுவர். இப்பொருள் சிறிதும் இயைபுடைத்தன்று. கொழுவுக்கும் ஊசிக்கும் யாதோர்சம்பந்தமும் இன்மையால் என்க.

இங்ஙனமாக இதன் பொருளையுய்த்து நோக்குமிடத்துப் பலவாறு சங்கைகள் கிளம்பினவேயன்றி இன்னது பொருளென்றுவரையறையிட்டுக்கூறுவாரில்லை. மிகப்பிரசித்தி பெற்ற புலவர்களும் முற்கூறிய பொருளையே யெடுத்துக்கூறிச்சென்றனர் இதுநிற்க.

தொல்காப்பியத்துக்குப் புதியவிருத்தியுரை யெழுதிவருகிற சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத் .அ. சண்முகம்பிள்ளையவர்களால் வெளியிடப்பெற்ற தொல்காப்பியச் சண்முகவிருத்தி என்றநூலின் கண்ணே இந்த விஷயம் தெள்ளிது விளக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெரிதுங்களிப்புற்றோம். அதாவது:— துன்னம் என்பது ஊசியில் நூலைக்கோர்க்கும் துவாரமாம். துன்னூசியென்பது தைக்கிற ஊசியாம். தைக்கப்படுபொருளின் கண்ணே மிகநுட்பமாகிய தையல் ஊசி செல்லாமைபற்றி அப்பொருளில் தைக்கவேண்டிய பாகத்தில் தையலூசி எளிது செல்லும்படி வேறொரு தடித்த கோலால் தொளை செய்துகொண்டு அத்துளை வழியே தையல் ஊசியைப்போக்கித் தைப்பது பண்டையவழக்கமாம். இன்றும் செருப்புத் தைப்பார்பால் இவ்வழக்குண்டு. புத்தகங்கள் பயிண்டு செய்யுமிடத்திலும் இவ்வழக்கம் நன்கு காணலாம். ஆகவே இங்ஙனம் தையலூசி செல்லுதற்கு வழியாக்குங்கருவியாகிய கோல்தான் மேற்கூறிய கொழு என்பது. இப்பொழுது கொழுச் சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறுபோல என்பதற்குப் பிரத்தியட்சப் பிரமாணமான நிராக்ஷே

பணைப்பொருள் இதுதானென்றுகொள்ளத் தட்டில்லை. தைக்கப்படு பொருள் எளிதாயின் அதில் முதலிற் றுளையாக்கிச்செல்வது தைய லூசியின் துன்னத்திற்கு முன்னுள்ளபாகமேயாம். அப்போது அது வே கோழு என்றுகொள்ளினும் பொருத்தமுடைத்தே யென்க என்று இப்பொருளைச் சுருக்கி வரைந்துள்ளார்கள். துன்னல்-தைத் தல், துன்னக்காரர் - தையற்காரர், துன்னர் -செம்பார், தையற்காரர் எனவழங்கலால் துன்னூசியென்பதும் தையலூசி என்றே பொருள் படும். இஃதன்றித் தைத்தற்றொழில் சம்பந்தம் சிறிதுமில்லாத கலப்பையின் ஓர் உறுப்பெனல் பொருத்த முடைத்தன்றென்பது து ணியப்படும். மேற்கூறிய இப்பொருளை நிலைப்படுத்தினாலன்றி உவ மேயத்துக்குச் சிறிதும் பயனில்லை யென்பதும் கவனிக்கத்தக்கதே.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்ப ஆகலின் இதுவரை முன்னோர் கூறி வந்த பொருள்மறுக்கப் படுகின்றதேயென்னும் அபிமானத்தைவிட்டு உண்மையைமட்டும் கவனிப்பார்க்கெல்லாம் இப்பொருள் பெருமகிழ் ச்சி விளைவிப்பதேயாம்.

பத்திராதிபர்.

தாமஸ் அல்வ - எடிஸன்.

வையகத்தாரால் மதிக்கப்பெற்ற தாமஸ் அல்வ எடிஸன் என் பவர் அடைந்தகீர்த்தியைப்பற்றிச் சற்றுச்சுருக்கிச்சொல்வோம்.

இவர் ஆழ்ந்த பண்டிதருமல்லர். ஆழ்ந்த ஆலோசனையுள்ளவரு மல்லர். ஆனால் அவரிடம் நினைத்து உண்டு பண்ணுகிற சக்தியும் ஒவ் வொரு காரியத்தையும் அப்பியாசத்திற்குக் கொண்டுவரும் பழக்க மும் இருந்தன.

அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஓஹியோவைச்சார்ந்த அல்வா என்னுமிடத்தில் 1847-ம் ஞு பிப்பிரவரிமீ 11-ம் உயில் பிறந்தார். அல்வாவில் பிறந்தமையால் அல்வா எடிஸன் என்னும் நாமத்தை வகித்தவராயினர். இவர் இளைஞராயிருக்கையில் அதிக புத்தியுள்ள வராயும் வாசிப்பதில் சதா பிரியமுள்ளவராயும் இருந்தனர். பன்

னிரண்டாம் பிராயத்தில் அமெரிக்காக் கண்டத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் ஜாகாவில் சமாசாரப்பத்திரிகையை விற்கும் சுதந்தரத்தை அடைந்தார். இத்தொழிலில் கொஞ்சம் திரவியத்தைச் சேகரித்து புதிதல்லாத சில அச்சை வாங்கி தன சொந்தத்திலேயே ஒரு பத்திரிகையை அச்சிட்டு அதற்கு (கிராண்டு - ட்ரங்கு - ஹெரால்டு) (Grand Trunk Herald) என்று பெயரிட்டார். ஒரு காலத்தில் இவர் ஓர் ஸ்டேஷன் மாஸ்டருடையகுழந்தை ரயில்வண்டியில் சிக்கி நசுக்குண்டு போவதாயிருந்ததைமிக்க தைரியமாய்க் காப்பாற்றினர். இவர் செய்த இந்த உபகாரத்திற்காக அந்த ஸ்டேஷன் மாஸ்டர் இவருக்கு மின் தபால் முறையைக் கற்றுக்கொடுத்தார். இது மின்சாரத்தைப் பற்றி அறியும்படியான அவகாசத்தை எடிஸன் என்பவரின் மனதில் உதிக்கும்படி செய்தது. பிறகு அந்த விஷயத்திலேயே இவர் தன் வாழ்நாள் முழுவதும் உழைக்க ஆரம்பித்தார். ரசாயன சாஸ்திரத்தில் இவருக்கு ஏற்கனவே நல்ல ஞானம் பிறந்து இருந்தது. ரசாயன சாஸ்திர ஞானமும் மின்சார விஷயமான அறிவும் இவைகள் இரண்டுமே நூதன விஷயத்தைக் கண்டறியும்படியான சக்தியை உண்டாக்கின. இவர் முதல் முதல் கண்டுபிடித்த நூதனமான யந்திரம் யாதெனில் தானுயியங்கும் ஓர் வகைக் கைக் கடிகாரமே.

1871-ம் வருத்தில் இவர் ஓர் கம்பெனிக்கு அதிகாரியானர். அப்பொழுது இவர் மற்றொருநூதன யந்திரத்தைக்கண்டுபிடித்தார்.

இதன் பின்னர் சில வருஷங்களில் மின்சார யந்திரத்தைக் கண்டு பிடித்து அதனல் மிக்க தூரத்திலிருக்கும் ஸ்தலங்களை யெல்லாம் சமீபமாக்கி ஜனங்களுக்கு மிக்க சுகத்தையுண்டுபண்ணினர்.

இவ்விதமாய் எடிஸன் என்பவர் சோம்பலில்லாமல் ஊக்கமாய் உழைத்து வந்தார். ஓர் நிமிஷங்கூட இவர் காலத்தை வீணாக்கினதில்லை.

ஓர் முறை ஐரோப்பிய சாஸ்திர சம்பந்தமான கம்பெனியார் இவருக்கு 500 பவுன் விலையுள்ள ஓர் கைக் கடிகாரத்தை இனமாக அளித்தார். இவர் அதைத் தன் பெட்டகத்தில் பத்திரமாய்ப் பூட்டி வைத்தனரேயன்றி ஒருபொழுதும் உபயோகித்திலர்.

ஓர் சமயம் இவர் (டைப்ரைட்டிங்) Type writing யந்திரங்களைப்பற்றி அறிய விரும்பி அனேக விதமான யந்திரங்களை வரவழைத்து அவைகளை நன்றாய் ஆராய்ந்து பார்த்து அவைகளின் ரகசியமனைத்தையும் ஒரே தினத்தில் கற்றுக்கொண்டு இதில் நிபுணர்களாயிருந்தவர்களுக்குங் கூட சில நூதன சங்கதிகளைப் போதிக்க ஆரம்பித்தார்.

(இன்னும் வரும்.)

M. ராகவேந்திராச்சார்,

ஸ்கூல் உபாத்தியாயர், பவானி.

சிந்தாமணி சரித்திரம்,

[முன் தொடர்ச்சி.]

இதைக்கேட்ட சங்கரி

" அத்தே ! வரவரக் காலம் கெட்டுக்கொண்டு வருகிறது. எங்கே பார்த்தாலும் பிள்ளைகள் ஓடியோடிப் படிக்கிறதாகவும் வேதாந்தங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுக்கொள்ளுகிறதாகவும் வீண் ஆடம்பரமே தவிர வாஸ்தவத்தில் மனுஷப் பிறவியின் சுபாவம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. அந்தப் பெண்ணைக் காட்டிலுமா அந்த அச்சி மேன்மையாயிருக்கப் போகின்றாள். என்னவோ, தலையில் எழுத்து ! மலையாளமென்ன ! நமது நாட்டில் எத்தனை பாவிகள் இவ்விதமாகக் கெட்டலைந்து திரிகிறார்கள். இந்த நாளைப் பிள்ளைகள் என்ன என்னவோ ஆகாயப்பந்தல் போட்டுக்கொண்டு வீணான காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஐயோ! நமது தெருவிலிருக்கும் சாமா கிளிபோன்ற சம்ஸாரத்தை முகம் பாராமல் வைத்து விட்டு ஒரு கழுதையைக் கட்டிக்கொண்டு அதன் காலே கதி யென்று கிடக்கிறான். இவன் போல இன்னும் எத்தனை கொடியவர்கள் இவ்விதமாக அக்கிரமம் செய்து கொண்டு வெளியில் வரும்போது மட்டும் எங்களுக்குச் சமானமில்லை யென்று சொல்லிக்கொண்டு திரிகிறார்களோ? இவர்களை யெல்லாம் மானங்குலைய அடித்

துப் புத்தி கற்பிப்பதற்கு ஒரு முறையுங் காணோம். எத்தனை பிரம்ம ஹத்திகள் ரெயில்வே ஸ்டேஷனில் ரிப்ரெஷ் மெண்ட் ரூமில் பறையனோடு பறையனாய்ச் சேர்ந்து குடித்து மெய்ம் மறந்து புரளுகிறார்கள். இதனால் எல்லாம் நமது நாட்டுக்கு கௌரவக் குறைவு உண்டாகவில்லையாம். நாம் எல்லாம் படிக்கவில்லையாம். அம்மா! கைம்பெண்களெல்லாம் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லையாம். அதனாலே தான் நமது தேசமெல்லாம் கெட்டுப்போய் விட்டதாம். எங்கே போனாலும் இந்த அசட்டுப் பிள்ளைகள் ஜாதி வர்ணாச்சிரமம் வழக்கம் ஒன்றையுங் கவனியாமல் தாறுமாறாகப் பேசிக்கொண்டு கூட்டங் கூடுகிறதும் இரைச்சல் போடுகிறது மாயிருக்கிறதே. வரம்பு கெட்டு நடக்கிறவர்கள் ஆணாயிருந்தாலென்ன? பெண்ணாயிருந்தாலென்ன? அவர்களைச் செருப்பால் அடித்து ஜாதி முறைதப்பாமல் நடக்கும்படி செய்தாலல்லவோ நமது நாட்டுக்கு க்ஷேமம் உண்டாகும்? அந்தச் சிந்தாமணியின் புருஷன் மலையாளத்தில் நாறி நலங்குலைந்து நின்றுவிட்டுப் பிறகு பணக்காரனாகமட்டும் இங்கே வந்துவிட்டால் இங்கிருக்கும் கிறுக்கர்களெல்லாம் அவனைக்கொண்டாடித் தலைமேல் தாங்குவார்கள். அவன் செய்கிற பாவத்துக்கு தண்டனை எங்கே? எத்தனைபேர்கள் குடிக்கிறார்கள்? மாம்சம் தின்று கெட்டலைகிறவர்கள் எத்தனைபேர்? புருஷர் விபசாரத்துக்குக் கேள்வி முறையில்லை. ஜாதி, வர்ணாச்சிரமம் கேலியாகப் போயிற்று. இத்தனை விபரீதத்தில் இவர்கள் வேதாந்தம் கற்கிறார்களாம்! கெட்டுப்போயிருக்கும் நம்முடைய சீமையை மேன்மையான ஸ்திதிக்குக் கொண்டு வருகிறார்களாம். இந்த ஆச்சரியத்தைஎன்னவென்று சொல்கிறது! என்தம்பி முத்துச்சாமி தலையை மொட்டையடித்துக்கொண்டு இருக்கிறான். சந்தியாவந்தனம் தொலைந்து போயிற்று. காலை ஆறு மணிக்குப் பல் தேய்ப்பானோ தேய்க்கமாட்டானோ? பறையன் பண்ணுகிற இரண்டு ரொட்டியையும் ஒரு சீஸா ஸோடாவையும் விழுங்கி விடுகிறான். இவனுக்கு என்னமோ யோகாப்பியாசமாம். அவன் பகவத் கீதையையும் ஞானவாசிஷ்டத்தையும் கீழே வைக்கிறதில்லை. என்ன என்ன வேடிக்கைகளோ நடக்கின்றன. எது எப்படியாகிலும் போகட்டும். யோக்கியமான மனைவியைப் பரிதபிக்க விட்டு விட்டுப் பயமில்லாமல் துன்மார்க்கத்தில் சீரழிகிறவர்

களை வம்பு மரத்தில் கட்டி யடிக்கிறதற்கு ஒரு வழி ஏற்படாதா? எத்தனை குடித்தனங்கள் இவர்களால் சோகமடைந்து நிற்கின்றன. இதற்கெல்லாம் ஒன்றையும் காணும். காங்கிரஸாம், ஸொஸைடியாம். மீட்டிங்காம், உபந்நியாசங்களாம். அந்தத்துரை வருகிறான், இந்தத்துரைசானி வருகிறாள் என்று சொல்லி நித்தம் நித்தம் இந்த க்கூக்குரலைத் தவிர உள் நாட்டில் நடக்கிற அகிருத்தியங்களுக்கெல்லாம் ஒரு பரிகாரத்தையுங்காணும். அந்த நாளையில் ஒருவன் வர்ணாசிரமத்துக்கு விரோதமாய்த் தவறி நடந்தால் அவனை நாலு பெரியோர்கள் கண்டிக்கிறதும், அவனை ஒழுங்கான நிலைமைக்குக் கொண்டுவருகிறதும் வழக்கமாயிருந்தது. இந்த நாளில் பெரியோர்களெங்கே, பெருந்தலைகள் எங்கே? மடாதிபதிகள் ஒப்பமாட்டார்களே என்கிற பயம் அந்த நாளில் இருந்தது. சிவசிவ அதைச் சொல்லியென்ன பிரயோஜனம். உபாத்தியாயர்கள் கேடுகெட்டுப் போனால் மாணுக்கர்கள் எப்படி உருப்படுவார்கள். மாமியார் போகும் வழிதானே மருமகளுக்கும். ஒன்றுக்கும் கேள்வி முறையில்லை. என் தம்பி சம்ஸாரத்துக்கு ஆற்றங்கரையிலிருந்து ஜலம் கொண்டு வருகிறதும் அடுப்பின் முன் நின்று சமைக்கிறதும் நாகரீகமில்லையாம். காலையில் எழுந்திருக்கிறதும், காப்பித் தண்ணீரைக் குடிக்கிறதும், படிக்கத் தெரிந்ததற்கு அடையாளமாக இரண்டு புஸ்தகங்களை வைத்துக்கொண்டு படிக்கிறதுந்தான் வேலை. அந்த புஸ்தகமாவது என்ன? தொப்பி, சிசா, தவளை, குரங்கு, பிஸ்கோத்து, இவைகளைப் பற்றிய புண்ணிய கதைகளைத் தான் திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டிருக்கிறார்கள் அம்மா! அவள் ஜன்மமும் கடைத்தேறிப்போகும் நம் குடித்தனத்துக்கும் குறைவில்லை. இதைப் பார்த்து முத்துச்சாமி மகிழ்ந்து போகிறான். எங்கே பார்த்தாலும் இந்தக் கிறுக்காகப் போய் விட்டது. அடுத்த வீட்டுத் தாயம்மாள் பெண் ருதுவாகி மூன்று வருஷமாகிறது. அவள் மாப்பிள்ளை பீ. ஏ. பாஸ் பண்ணி மண்ணுகப்போனானும். சாந்தி பண்ணிக்கொள்ள மூவாயிர ரூபாய் கேட்கிறான். அந்த பெண் குத்து விளக்குப் போல் நிற்கிறது. இந்தக் கொடுமைக்குத் தண்டனையைக் காணுமே. எத்தனை அழிம்புகள் நடக்கின்றன. எங்கே பார்த்தாலும் இவ்விதக் கொடுமையாகத்தானே இருக்கிறது. காங்கிரெஸில் இந்தப்புலிகளெல்லாம் பேசிப் பேசி நம்

குடித்தனங்களெல்லாம் முன்னுக்கு வருகின்றனவாம். எதிர்த்த வீட்டுக் காகிதன் வேறு ஒன்றையும் காணேம். அவன் புளியை த்தள்ளி விட்டானும். ஒருசுமை தாடி வளர்த்துக்கொண்டு கோசாவி மாதிரி வந்து நிற்கிறான். என் வீட்டுக்காரர் அக்னி ஹோத்திரம் பண்ணுகிறதைப் பரிகாசம் செய்கிறான். இந்தக் கிறுக்கன் நாலு கிறிஸ்தவர்களையும் சூத்திரர்களையும் ஒரு பந்தியில் வைத்துக்கொண்டு சாப்பிட்டானும். அதுமட்டுமா? இந்தப் பெருமையைப் பகிரங்கமாகச் சோல்லிக்கொண்டு நமது நாட்டை மேன்மைப் படுத்துவதற்காக இவ்விதம் செய்தேன். அனைவோரும் என்னை அனுசரிக்கவேண்டுமென்று நடுத்தெருவில் உபந்யாஸம்செய்கிறான். இந்த விபரீதங்களை எல்லாம் யார்கவனிக்கிறார்கள். அந்தப் பெண்ணினுடைய முகத்தையும் அழகையும் பார்க்கும்பொழுதே மிகவும் மனவருத்தமாயிருக்கின்றது இவள் அங்கே போனால் தானென்ன? அந்தக் கொலைகாரன் கவனிக்கப் போகிறானா? இந்தப் பாவிகள் அந்த வழியிலிறங்கினால் அப்படியே தொலைந்து போகிறார்களே ஒழியத் திரும்புகிறதில்லை. ஜாதியைக் கெடுக்கவும், தர்மத்தை அழிக்கவும், விதவைகளைப் பாழாக்கவும், ஸொஸைடிகள் கூடுவதைக் காட்டிலும் நாலுபேர் கூடி ஜாதிமுறை தவறி நடப்பவர்களையும் குடிக்கிறவர்களையும் வியபசாரம்செய்கிறவர்களையும் தள்ளிவைத்தாவது அவமானப்படுத்தியாவது ஒரு தண்டனை விதிக்கக் கூடாதோ? தம்பதிகள் சரியாய் வாழ்ந்தால் வீடுகள் வாழும். வீடுகள் நன்றாக வாழ்ந்தால் அல்லவோ நாட்டுக்கும் உலகத்துக்கும் வாழ்வுண்டு. தனித்தனிக் கெட்டலைந்து நிற்கிறபோது சமஷ்டியாக நாடு எவ்வாறு க்ஷேமத்தை அடையும். இந்த சிலங்கள் இதைக் கவனிக்கிறதில்லையே" என்று சொல்லிவிட்டு மிக்க பரிதாபத்துடன் அங்கிருந்த மங்கையர் அனைவரும் ஸ்நானம் செய்துவிட்டுத் தங்கள் தங்கள் கிருகம் போய்ச்சேர்ந்தார்கள்.

(இன்னும் வரும்.)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

வரவுக்குத்தக்க செலவு.

நமது தமிழ்நாட்டிலுள்ள ஜமீந்தார்கள், பிரபுக்கள் முதலிய பல்லோர் வரவுக்குமிஞ்சிய செலவுசெய்து அதிசீக்கிரத்தில் கடன்காரர்களாகி வருவாயுமிழந்து பூர்வீக பூஸ்திதியும்போய் மானங்குலைந்து உடல்மெலிந்து காராக்கிரகப்பிரவேசர்களாகிச் சீவப்பிரேதம்போல் யாவராலும் இழித்துக்கூறப்பட்டுக் கெடுதல் நாம் எல்லாரும் அறிந்ததொன்றே. லட்சக்கணக்காக வருவாயுள்ள எத்தனை ஜமீன்கள் அழிந்தன ? எத்தனை பிரபுக்கள் யாசகராயினர் ? இதற்குக் காரணமென்ன ?

தம்முடையசெல்வத்தின் அளவையும், தமக்குவரும் வருவாயின் அளவையும் உற்றுநோக்கி வருவாய்க்குச்சிறிது குறையவே செலவுசெய்யவேண்டும் என்று மனஉறுதிகொள்ளாமல் டம்பம் ஒன்றையேவிரும்பி அளவறியாது மனம்போனவாறெல்லாம் செலவிடுகிற துர்வழக்கத்தைத்தவிர வேறு ஹேது ஏது ?

ஒருவனுக்கு எவ்வளவு சுருங்கியவரும்படியிருப்பினும் தோஷமில்லை. அவ்வரவிலும் சிறிது சுருங்கவே செலவிட்டுவந்தால் போதும். இதுபற்றியன்றே " ஆகாறளவிட்டிதாயினுங் கேடில்லை போகாறகலாக்கடை " என்றார் பொய்யில் புலவர். இதன்பொருள் வருவாயின் அளவானது குறைந்ததாயிருப்பினும் செலவு அதிலும் அதிகப்படாதிருப்பில் யாதொரு தீங்குமில்லை என்பதாம். இத்திருக்குறளின் அருமையை யுய்த்துணரும்பொழுது எத்துணைப் பெருமகிழ்ச்சி யுண்டாகின்றது!

ஆன முதலில் அதிகஞ் செலவானல்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனு யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானும் நாடு.

வளவன் "ஆயினும் அளவறிந்தழித்துண்" என்றாற்போன்ற நீதிமொழிகளெத்துணையோ யிருக்கின்றனவே. இத்தகைய நீதிவாக்

கியல்களை யறியாதார் அதிகச்செலவிட்டுக் கெட்டுப்போய் .விழித்திருப்பது வியப்பன்று. நன்கு கற்றூரும் கற்றறிமூடராகிக் கைப்பொருளறத்தொலைத்துப் பற்றென்றுமின்றி மையோபாவம் என்றுவறியாரிலும் வறியாராகின்றார். தீயவழியில் சிறிதும் செலவிடலாகாது; நல்வழியில் எத்துணையும் செலவிடலாம் என்று அறநூல்கள் கூறுகின்றனவே என்னில், அந்நூல்கூறுவதெல்லாம் நல்வழியில் தம்பொருள் அளவிற்கேற்ப ஒழியாது மனமகிழ்ந்துசெலவிடவேண்டுமென்பதுவேயன்றி நல்வழியில் உள்ள பொருளெல்லாவற்றையும் செலவிட்டுவிட்டு ஏங்கித்திரியவேண்டுமென்றல்ல. சன்மார்க்கத்திலே கைப்பொருள் முற்றுந்தொலைத்துத் தரித்திரானால் அதனால் விளையும் துன்பத்தைத்தாம் அனுபவித்தல்மட்டோ? தமக்குப்பின்னுள்ள குடும்பத்தாரெல்லாரும் (கஷ்டம்) அனுபவிக்கச்செய்தலால் இங்ஙனம் செய்தார்க்குச் சித்திக்கும் புண்ணியத்தினும் பாவமே அதிகமாம். நம் கண்காண எத்தனையோ உத்தமர்கள் வரவுக்குமிஞ்சிய செலவிட்டுக்கெட்டுத் திண்டாடுகின்றனர்.

அதிகச்செலவுசெய்து வாழ்ந்து வருத்தமுற்ற சாத்தன் என்பவன் செலவைச்சுருக்க வகையறியாது தனது நட்பாளரொருவரையடுத்து "ஐயா' என் நிலைமைக்குமிஞ்சிய செலவுநேரிடுகின்றது, செலவுசுருங்கச்செய்யும் வழியைப்போதிக்கவேண்டும், என்று வினவினான். அதுகேட்ட நண்பன் அடுத்தகிராமத்திலுள்ள ஒரு பிரபுவின் பேரைச்சொல்லி அவரிடம்சென்று கேட்டறிந்துகொள் என்றான். இவனும் உடனே புறப்பட்டு அந்த பிரபுவீட்டுக்குச் சென்றான். அப்போது இராத்திரி 8 மணி யிருக்கலாம். மிகப்பெரிதான அந்தமாளிகையிலுள்ளே பலவாயில் கடந்துதட்டுண்டு தடுமாறிச்சென்று பிரபு இருப்பிடத்தையடுத்தான். பிரபுவோ ஓர்சிறிய குத்துவிளக்கடியிலிருந்து கணக்குப்புஸ்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவன் வரவையறிந்த,

பிரபு—யார் அங்கே நிற்பது?

சாத்தன்—ஐயா நான் அடுத்த கிராமவாசி.

பிரபு—வந்தகாரியம் யாது?

சாத்தன்—தங்ளிடத்தில் ஒரு முக்கியமான காரியத்தைத் தெரிந்துகொண்டு போக வந்தேன்.

பிரபு—நன்று. என்பால் தெரிந்துகொள்ள விரும்பும்விஷயம் எழுத்துமூலமோ அன்றி வாய்மொழி மூலமோ?

சாத்தன்—வாய்மொழி வழியேதான்.

பிரபு—"ஆயின் இருந்துபேசலாம்" என்று கூறிக் குப்பென்று விளக்கை அணைத்துவிட்டனர். வாய்ப்பேச்சிற்குக் கட்புலன் இன்றியமையாததன்று எனக்கருதி வீணாக விளக்கெண்ணெய் செலவாகாதிருக்கும்பொருட்டு விளக்கை அணைத்தார் பிரபு. இதனைப்பார்த்தவுடன் சாத்தன் மிகவும் பிரமித்துச்சிந்தித்தான். சற்றுநேரஞ் சென்றதும் "ஐயா யான் வந்தகாரியம் நிறைவேறிற்று. இனி அறிந்துகொள்ளவேண்டியதொன்றுமில்லை. இத்துணையே போதுமானது. யான் செல்கின்றேன் விடைதந்தருளுக" என்றான். அதுகேட்டபிரபுவும் "ஆம் அதிபுத்திசாலிகள் சொல்லுமுன்னமே குறிப்பால் அறிந்துகொள்ளுவது இயல்புதான், சுகமே போய்வாரும்" என்று கூறி விளக்கேற்றினர் என ஓர்பழங்கதை கூறுவதுண்டு. இஃதொரு கட்டுக்கதையேயாயினும் அநாவசியமாகச்சிறுபொருட்செலவும் செய்தல் கூடாது என்பதே இதனால் நாம் கைக்கொள்ளவேண்டும். "பொருள்தனைப் போற்றிவாழ்" என்பதும் இக்கருத்தையேயுடையதாம்.

பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை யருளில்லார்க்
கவ்வுலக மில்லாகி யாங்கு.

முருகவேள்.

மாயாவாதம்.

உலகின்கட்டோன்றி நிகழும் பலவகைச் சமயங்களுள் ஒன்று அது. அதனை சைவநூல்கள் புறச்சமயமாகக்கூறும். இதனுண்மை இனைத்தெனத்தேறுதற்கு மாயாவாதம், மாயாவாதசப்பிரிவு என ஓர் நூலையும் அப்பேரானழைக்கப்படும் ஓர் சமயத்தையும் [illegible] லத்துக் கண்டிலம். ஆதலின் மாயாவாதமென [illegible] ரேவெனின், இன்றெனக் கூறுதற்கும் இடமில் [illegible] ளில் உண்டென்று கூறுதலானே முற்காலத்தி [illegible]

ஓர் சமயமும் அதற்குரிய நூலும் உண்டென்பதே தேற்றம். பிற்காலத்தில் யாவரும் மதிக்கத்தக்க வேதாந்த நூல்களில் தங்கள் கொள்கைகள் அடங்கி இருக்கின்றனவென அவ்வளவின் மகிழ்ந்து அக்கொள்கைகளைப் பூருவபக்கப்படுத்தி இருப்பதை உணராது வேதாந்த நூல்களே தங்கட்குரியநூல்களென மாயாவாதிகள் கையாண்டுவந்த ஏதுவானே மாயாவாத நூல்கள் காலாந்தரத்தில் இறந்தொழிந்தனபோலும்.

ஒரு மதத்தினுண்மை தேறவேண்டின் அம்மதநூலைக்கொண்டும் அம்மதத்தை பூருவபக்கமாகவோ சித்தாந்தமாகவோ கூறும் ஏனைய நூலைக்கொண்டும் உணர்தலே முறைமையாம். அற்றாயின் மாயாவாதத்தினுண்மை இனைத்தெனத்தேறுதற்கு அம்மதநூல்கள் ஒன்றும் இக்காலத்துக் காணப்படாமையின் அதனைப்பூருவபக்கமாக கூறும் சைவநூலைக்கொண்டே ஆராய்வாம்.

மாயாவாதக்கொள்கைகள் வருமாறு:—ஞானமே சொரூபமாய் பிரபஞ்சத்திற்குக் காரணமாய் எல்லையில்லாத அனந்தமாய் உருவமின்றி அருவமாய் எங்கும் நிறைந்துநிற்பதாய் சத்தாய் சுத்தமுமாய் ஓரடையாளமும் ஓர்குணமுமில்லாததாய் நீக்கமில்லாத அநுபூதி தனக்கேயுடையதாய் நின்றது பிரமம்.

ஒரு ஆதித்தன் பலபாத்திரங்களிலுண்டாகியஜலங்களில் வேறு வேறு தோன்றினாற்போன்று ஒரு பிரமமே உடல்கடோறும் தனித்தனி தோன்றப்பட்டு நிற்கும். அவ்வாதித்தன் பாத்திரஜலங்களிலகப்படாமல் மேற்பட்டு இயங்குகின்றாற்போல அந்தப்பிரமம் உடலிலகப்படாது மேற்பட்டு இந்திரியங்கட்கும் கரணங்கட்கும் அறிதற்கரிதாய் நிற்கும்.

இருளின்கட் பழுதையைப்பாம்பெனக் கண்டோர் ஆதித்தகிரணந்தோன்றப்பெறின் பழுதைமெய்யாய் பாம்புபொய்யாய்க் கா[illegible]ர். அதுபோல அஞ்ஞானத்தாலே பொய்யாகிய பிரபஞ்சத்[illegible]ல் தோற்றும் பிரமஞானம் விளங்கின காலத்துப் பிரமமே [illegible] பிரபஞ்சம் பொய்யாய்த்தோன்றும்.

[illegible]ரமத்தினின்றும் தோன்றும். பிரமத்தினின்றுந் [illegible]ருரு முதலுண்டாய் பிரபஞ்சந்தோன்றுவது

மில்லை. ஒருவர் தோற்றுவிக்காமற் றானே உண்டாமாகில் அதுவும் ஒருமுதலாய் அழியாது நிற்கத்தகும். மெய்போலத் தோன்றினும் பாரமார்த்தத்தில் பொய்யேயாம்.

சிலம்பியானது தன்னிடத்திலே நின்றும் நூலைத்தோற்றுவித்துக்காத்து அழியும்படி தான் நீங்குந்தன்மைபோலப் பிரமமும் தன்னிடத்திலே நின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து காத்து சங்கரித்திடும். ஆதலின் பிரமத்தின் நியமமே பிரபஞ்சத்தின் செயலெல்லாம்.

பிரமத்தில் ஆகாசமும் ஆகாசத்தில் வாய்வும் வாயுவில்அக்கினியும் அக்கினியில் ஜலமும் ஜலத்தில் மண்ணுந்தோன்றி மண்ணிற்றோற்றியவோஷதியிலே உணவாய் அவ்வுணவில் தாதுக்களாறுமுண்டாயின.

பிரமமானது பஞ்சகோஷமாகிய உருவின்கண்ணே ஆதித்தகிரணம் பூமியின்கண் கடந்தோறும் தனித்தனி தோன்றுமாறுபோற்றோன்றிப் பிரகாசிக்கும். அந்தப்பிரமமும் ஆதித்தனைப்போல எட்டாதாயினும் உருக்கடோறும் தனித்தனியாய் நிற்கும். பிரமம் அப்படிக்கூடிநின்றாலும் பாசம் பிரமத்தைப் பற்றுவதில்லை. பற்றாதாகவே பிரமத்திற்குப் பாசத்தோடு பற்றில்லை.

பலவர்ணமாகிய மணிகள் கோக்கப்பட்ட ஒருநிறமான நூல் அம்மணிகளாலே பலநிறமாய்த் தோன்றினும் தன்றன்மைகெடாது நின்றாற்போல பலவேறு வடிவங்கடோறும் கூடியபிரமமும் பலபேதப்பட்டாற்போற் றோன்றினும் அங்ஙனமின்றி நிற்கும்.

போற்றுவோர் செயலால் பரமான்மா சீவான்மா வாதிய பலநாமங்களை ஒரு பிரமமே பொருந்திப் போகத்திலும் கூடியனுபவிப்பது போற்றோன்றும். சாக்கிரமாதிய நான்கு அவத்தையும் பொருந்தும்.

கருவிகளோடுகூடி அவற்றை நானென்றுகருதி நிற்பதும்பந்தம். அவற்றை நீங்கித் துரியத்து நிற்கவே தற்சொருபமாகிய சிவோகம்பாவம்பிறந்து முத்தியுண்டாம். பந்தத்துக்கு மூலப்பிரகிருதி வித்தாம். இதன் செயலால் மாயாகாரியங்களாகிய சுகதுக்கங்களுண்

டாம். பிரகிருதியின் செயல்கெடவே மாயை நீங்கும். நீங்கவே ஞானம் உண்டாம். உண்டாகவே சிவோகம் பாவம் பிறக்கும்.

கர்மாநுஷ்டானமாகிய புறச்சுத்தியாலே அகச்சுத்தியுண்டாம். அகச்சுத்தியால் ஞானம் வரும். ஞானம் அகம் பிரமமென்பதனை புணர்த்தும். அங்ஙனம் தன்னிலே தன்னையனுபவித்து ஒருபேதமுமின்றிப் பூதங்கள் கெடவும் தான்கெடாது நிலைபெற்று அகம் பிரமமெனத் தெளியுஞானமே பிரமஞானமாம்.

வேதமுடிவாகிய தத்துவமசி மகாவாக்கியமும் அது நீயானாய் என்பதல்லது மற்றொருபொருள் சொல்லுதற்கில்லை. இப்படித் துணிவாய்க்கூறும் உண்மையைக்கொண்டு சோகம் பாவகமாக வறியார். அது வருதற்காக இயமாதியாகங்களைச் செய்துதிரிவர்.

இதுகாறும் மாயாவாதக்கொள்கையை சுருக்கிக் கூறினோம். இனி வேதாந்தநூல்களாகிய கைவல்யம் ஞானவாசிட்ட முதலாகிய நூல்களை மாயாவாதநூல்களென இக்காலத்துச்சிலர் கூறுதலால் அக்கூற்று ஒருசிறிதும் பொருத்தமுடைத்தன்றென்பதை சிறிது விளக்குவாம்.

மாயாவாதக்கொள்கைகளிற் சிலவோ பலவோ வேதாந்தநூல்களிலிருப்பனகொண்டு வேதாந்தத்தை மாயாவாதமென்றல் இயலாது. அது எதுபோலவென்னில் எச்சமயக் கொள்கைகளையும் தன்னுளடக்கி நிற்பதொரு மெய்ச்சமயமாம். சைவசமயத்தில் பலசமயக்கொள்கைகளிருப்பவைகொண்டு அவ்வச்சமயங்களாய்க்கூறாது சைவசமயமென்றே கூறுதல் போலாமென்க.

இனி மேற்கூறிய மாயாவாதக்கருத்தினின்றும் விசேடக்கருத்துக்கள் கைவல்யாதி நூல்களிலுளவென்பதை ஒருசிறிது விளக்குதும். இவ்விஷயத்தில் பிரவேசிப்பதற்கு முன்னர் தெரிந்துகொள்ள வேண்டியது. பரிபாஷையாதலின் அதனை விளக்கிக்கொண்டு பின்னர் விஷயத்திற் செல்வாம்.

வேதாந்த நூல்களில் ஆன்மாவென்பது பரமான்மாவையும் சீவான்மா யென்பது ஆன்மாவையுங்குறிக்கும். இதனை " ஒன்றெனமறைகளெல்லா முரைத்திடவுயிர்களொன்றி, நின்றெனனென்றுபன்

மை நிகழ்த்துவதென்னையென்னி, னன்றவைபதிதானென்றென்றை யும்" என்ற சிவஞான சித்தியார் செய்யுளானுமுணர்க.

இனி விஷயத்திற் செல்வாம். கைவல்யத்தில் "தன்னையும்தனக்காதாரத்தலைவனையுங் கண்டானேல், பின்னையத்தலைவன்றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்" என்றதனாலேயே தானான சிவனும் தலைவனான முதல்வனும் உண்டென்பதூஉம் சீவனுக்கே அநுபவமுண்டென்பதூஉம் பெற்றாம். பெறவே பிரமத்துக்கேஅநுபவமுண்டென்னும் கொள்கையோடு பொருத்தமில்லாததுடன் அதனினின்றும் மேற்பட்டுள்ளதென்பது விளங்கும்.

"அகமெனுமான்மா பூரணமேகமநேகவிதஞ் சீவன்" என்றதனால் சைவசித்தாந்தத்திற் கூறியவாறு பதிஒன்று பசுபல வென்பதை வலியுறுத்தினதுமன்றி பிரமம் சீவன் என இருபொருள்களுண்டெனப்பட்டு ஒரு பிரமமே உள்ளதென்னுங்கொள்கையைமாற்றும். அற்றன்று. அச்செய்யுளில் "சகமுழுதுங்குளிர்சந்திரனேகம் சலசந்திரர் பலவாம்" எனவுவமை யெடுத்துக்காட்டியிருத்தலால் சீவனென ஒருபொருள் உண்மையிலில்லையென்றும் பிரமம் ஒன்றே உள்ளதெனக்கூற அமையுமாதலின் இது மாயாவாதக்கொள்கை அன்றெனக், கூறல் பொருந்தாது யென்பையேல் நன்றுகூறினை! அத்திருட்டாந்தம் பொருளுண்மையை விளக்குதற்காக ஆண்டுக்கூறவில்லை; மற்றெற்றுக்கோவெனில் ஒருசீவன் முத்தியடையின் முத்தியடைந்த சித்தான்மா எல்லாச்சீவர்களும் தானாய் நிற்பன் என்று முத்தனிலக்கணங்கூற அங்ஙனமாயின் மற்றைச்சீவர்களும் ஏன் முத்தியடையவில்லையென்று வினாவிற்கு விடையாகக்கூறப்பட்டதென்க. இது ஒருபுடையுவமை.

"......................பேரிற் பிரமத்துக்கும் உலகத்துக்கும் சிறிது சத்திகளுண்டே" என்ற செய்யுளால் முதல்துணைக்காரணங்களான மாயாசத்தி சிற்சத்திகளுண்டெனப்பட்டுப் பிரமமும் தன்னிடத்திலேநின்றும் பிரபஞ்சத்தைத்தோற்றுவித்துக்காத்துச் சங்கரித்திடும் என்றகருத்தைக் கண்டிக்கும். இதற்குக்கூறிய சிலம்பி திருட்டாந்தமும் அபின்ன நிமித்தோபாதானமாம். இதில் சிலம்பியினுடல் மாயைக்கும் கரணங்கள் சிற்சத்திக்கும் சீவன் சிவத்துக்கும்

உவமை. சைவசித்தாந்தங்களிற்கூறும் குலாலதிருட்டாந்தம் பின்ன நிமித்தோபாதானமாம். ஏற்றுக்கொள்பவர் அறிவிற்கேற்ப இவ்விரண்டும் உபகாரமாம். அதனைஈண்டுவிரிக்கிற் பெருகும்.

"அற்புதமாம் சுவாநுபவ மிகுமாளும் புவிதுரிய மதற்கப்பாலோர் கற்பனை யிலாதவிட மதீதமென்று மவுனமாக் காட்டும் வேதம்" என்ற செய்யுளால் துரியாதீத மொன்றுண்டெனவும் அது துரியத்தினிற்கும் கொள்கைக்கும் மேற்பட்டதெனவும் விளங்கும்.

"இந்த நீ தொம்பதத்தினிலக்கியப் பொருளாமென்றும் பந்தமில் பிரமமே தற்பதத்தினி லிலக்கியார்த்தம்" என்ற செய்யுள் மகாவாக்கியத்தைக்கொண்டே முப்பொருளுண்மை சாதிக்கின்றதல்லது ஒரு பொருளுண்மை சாதிக்கவில்லை அன்றியும் பந்தமில் பிரமம் என்றதானே பிரமம் அநாதி முதலலெனவும் சீவன் அநாதி பெத்தனெனவுப் துணியப்படும்.

"விருத்திகடாமு மின்னும் விநோதமாம் யோகத்தாலே துருத்திபோலூது மூச்சைச் சுகமுடனடக்கினிற்கும்" என்ற செய்யுளால் யோகாநுஷ்டானம் உடன்பாடென்பது பெற்றும். பெறவே அது வீண் செயலென்றகொள்கை பொருத்த முடையதன்றென்பது சொல்லாமலே விளங்கத்தக்க தொன்றும்.

இவ்வாறே ஞானவாசிட்ட முதலிய நூல்களும் கூறுகின்றன அவற்றை யெல்லாம் விரிவஞ்சி விடுத்தாம். இந்த வேதாந்த ஞான நூல்களைச் சற்குருவை யடுத்து அவர் கிருபையைப் பெற்று ஆராய்தலே தகுதியாம். குரு கிருபை ஈசுர கிருபையின்றி தானுனே ஆராய்ச்சி செய்யின் உண்மை யெய்தாதது மன்றி மடமையெய்தும். தேகத்தின் மீது வைத்த அபிமானத்தால் ஆசையை விடுவதற்குத் தைரியமில்லாமலும் சாதனம் செய்தற்கான நுண்ணுணர்வில்லாமலும் நான் பிரமமெனப் பிதற்றித்திரிபவர்களே மாயாவாதிகளாவர். இக்காலத்து மிவர்களுள்ளார்.

இனி மாயாவாதிகளும் வேதாந்த நூல்களைத் தங்கட்குரித்ததெனக்கோடலால் தானுன சீவனும் தலைவனான முதல்வனும் தலைவனைத் தனக்குத் தெரிய வொட்டாது மறைத்து நிற்கும் பாச (பந்த) மும் உண்டெனக்கொண்டு பாச நீக்கத்தையும் சிவப்பேற்றையும்

விரும்பி சற்குருவை யடுத்து சாதனித்தினிற் பவரும் சாதன முதிர்ச்சியா லனுபவத்தினிற் பவருமான வேதாந்திகளை மாயவாதிகளென்றும் வேதாந்த நூல்களை மாயாவாத நூல்களெனவும் அஞ்சாது கூறத் துணிந்தனர்.

இதுகாறும் கூறியவாற்றால் கைவல்யாதி நூல்கள் மாயாவாதி நூல்களல்ல வென்பதூஉம் ஆதரிப்பாரில்லாமல் மாயாவாத நூல்கள் இறந்தொழிந்தன வென்பதூஉம் ஞானசாதனங்களைச் செய்யாது தேகபோகங்களிலாசையுமறாது தான் பிரமமெனச் சொல்லித் திரிபவர் மாயாவாதிகளென்பதூஉம் பெற்றாம்.

போ. மு. முத்தைய பிள்ளை,
உபாக்கிராசனாதிபதி சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி.

கடின கவசிகள்.

பெரும்பாலும் நாம் நம்மைச்சுற்றிலும் காணும் பிராணிகள் பூனைபோன்று மெல்லிய மிருதுவான மயிர்ப்போர்வையாவது, ஆடு போன்று கம்பளப் போர்வையாவது பன்றி போன்று கட்டைமயிர்ப் போர்வையாவது கொண்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் ஈசுவர சிருஷ்டியில் சில பிராணிகள் துப்பாக்கி குண்டுக்கும் கத்தி வெட்டுக்கும் எளிதில் இடங்தராத கடினமிக்குடைய கவசங்கள் (மேற் போர்வை) உடையன. அவற்றுள் சிலவற்றையும் அவற்றைப்பற்றிய சில விசேஷக் குறிப்புகளையும் ஈண்டு எடுத்துரைப்பாம்.

I. அழுங்கு.

"அழுங்கு" என்னும் பதம் ஆங்கில பாஷையில் 'கடினகவசி' எனப் பொருள்படும் "ஆர்மடில்லோ" என்னும் வார்த்தையால் குறிப்பிக்கப்படுகிறது. தென் அமெரிக்காவில் உள்ள காடுகளில் பெரும்பாலும் காணப்படும். இப்பிராணியின் வாசஸ்தலம், குன்றுகள் போன்று நீண்டுயர்ந்தோங்கிய மணல்மேடுகளாம். ஆங்கு அது

முயல் எலி முதலியன போன்று வளை தோண்டி வசிக்கும் இயல்பு டையது. அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் இதன் மாமிசத்தை அதிக அருமையானதென மதிப்பார்கள். ஆதலின் இதனைப்பெற அவர்கள் குழி தோண்டி அழுங்கினை வெளிப்படுத்திப் பிடிப்பார். சாதாரணமாக அழுங்கு வளையின் ஆழம் 15 அடிக்கு மேலும் போகும்.

யாதானும் ஓர் வளையில் அழுங்கு இருப்பதும் இல்லாததும் அமெரிக்கனால் எளிதில் அறியக்கூடும். எவ்வாறெனில், ஓர் வளை கண்ணிற்பட்டவுடன் ஓர் சிறு குச்சியை அவன் அதனுள் நுழைப்பான். நுழைத்த சிறிது நேரத்திற் கெல்லாம் புலபுலெனக் கலகலெனப் புற்றினின்றும் கிளம்பும் ஈசெல்களைப் போல கொசுகுத் திரள்கள் அவ்வளையினின்றும் கிளம்புமாயின் தான் தேடிச் செல்லும் அழுங்கு சர்வநிச்சயமாய் அங்குள்ளதென எண்ணி அகமகிழ்வான். கொசுகுகள்வெளிவராவிடில்அழுங்கும் அங்கில்லைஎன அவன் அறிவன். அழுங்கிருக்கும் வளையை அவன் இவ்வாறு அறிந்துகொண்டவுடன் அவன் மெல்லிய நீண்டு வளைந்து கொடுக்கக்கூடிய குச்சி ஒன்றை நறுக்கி வளையின் போக்கு அறியுமாறு அதனை அதனுள் நுழைப்பான். குச்சிபோகும் இடமெல்லாம் குழி வெட்டுங்கால் தனக்கு நேரிடக்கூடிய விபத்தினின்றும் தப்புமாறு அழுங்கு தன்னால் இயன்ற வரை அதிவிரைவினில் பூமிக்குள் மேன்மேலும் தோண்டிக்கொண்டே செல்லும். அன்றியும் எலிவளையுள் இருப்பதுபோன்று இதன்வளையும் உள்ளிடத்தில் பலவாயில்கள் கொண்டிருக்கும். ஆதலின் அவற்றை யெல்லாம் வெட்டிப்பார்ப்பது அவனுக்கு அதிக சிரமமாகத்தானிருக்கும். சில சமயங்களில் அதனைப் பிடிக்க நாள் ஒன்றற்கும் மேலாகும்.

இவ்வாறு வெகு சிரமப்பட்டு அழுங்கைத் தனித்தானும் நாலைந்து குட்டிகளோடானும் கண்டுகொண்டவுடன் அவன் கண்மூடித்தனமாய் அதனைக்கையால் எடுத்தெரியாமல் சர்வ ஜாக்கிரதையுடனும் அதன் கால் தனது எந்த பாகத்திலும் படாதபடி மிக கவனம் செலுத்திப் பிடிப்பான். ஏனெனில், அதன் கால் நகங்கள் மிகக்கூர்மை வாய்ந்தன. அவற்றை அது பிடிப்போரின் சரீரத்தில் எப்பாகத்தேனும் ஆழப்பதிப்பித்துப் படுகாயப் படுத்திவிடும்.

தனது சத்துரு தனக்கு தீங்கிழைக்கும் காலை இவ்வளவு உக்கிரகம் காட்டியபோதிலும் யதேச்சையாய் இருக்கும்பொழுது அது எக்கெடுதியும் புரியாமல் சாதுவாகவே இருக்கும். அதனால் நீந்தக் கூடுமாயினும் யாராவது அதனை ஜலத்தில் பிடித்துத் தள்ளினால் ஒழிய தண்ணீரில் இறங்காது. பகற்பொழுதில் அது என்றும் வெளிக்கிளம்பாமல் கூட்டுக்குள்ளேயே பதுங்கிக் கிடக்கும். இராப்பொழுது தான் அது வெளிக்கிளம்பி வந்து பழம், கிழங்கு, பூச்சி புழுக்கள் முதலியவற்றைப் புசித்து வளை புகும்.

அழுங்கிற்கு அடு படைகளும் தடு படைகளும் உள. அதன் அடுபடைகள் நாம் முற்கூறிய அதன் கூருகிர்களே. தடுபடை யாதெனில், அதன் இரு காதுகளையும் தவிர ஏனைய பாகங்களனைத்தையும் முழுதும் கவர்ந்திருக்கும் அதன் கடின போர்வையே. இக்கவசம் உறுதிமிக்குடைய சின்னஞ் சிறு எலும்புகளாலானது இப்போர்வையே அழுங்கிற்கு ஓர் அழகிய ஆபரணம் போன்றிருக்கும். இக்கவசம் உறுதியுள்ளதாயினும் எளிதில் வளைந்து கொடுக்கக்கூடியது. ஆதலின் அழுங்கு தனது தேகத்தை நீட்டிக் கொள்ளவும் பந்துபோல் திரட்டிக்கொள்ளவும் கூடும். இக்கவசம் பெரும் பெரும் பட்டாக்கத்திகள் தீட்டும் சாணைக்கல்லாக ஸ்பெயின் தேசத்தாரால் உபயோகிக்கப்படுகிறது.

II. நில ஆமை.

கடின கவசிகளில் இரண்டாவதாக நில ஆமையைச் சொல்லலாம். இஃதொரு தீங்கற்ற பிராணி. காட்டில் காற்றினால் விழுத்தப்பெற்ற பழங்களும் கீரைகளும் பூச்சி புழுக்களுமே அதன் ஆகாரம். இவை கிடையாக்காலங்களில் அது வேரும் கிழங்கும் தின்று ஜீவித்துத் தீரவேண்டி வருதலின் அதற்குப் பலமான கூரிய நகங்கள் அதன் குறுங்காலில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆயினும் இக்கூருகிர்கள் இதற்கு அடுபடையாகமாட்டா. இதன் சத்துரு இதைச் சமீபிக்கும் பொழுது இது ஓடித்தப்ப ஒரு சிறிதும் முயலாமல், "ஐந்துறுப்படக்கி" என்னும் தன் பெயர்க்கேற்பத் தனது சிரம், கை, கால், தலை, வால் ஆகிய இவைகளைத் தனது உடலுக்கு மேலும் கீழும் அமைந்துள்ள சிறந்த அரண்களே எனத்தகும் ஓடு

கள் இரண்டும் பொருந்தும் சந்தில் உள்ள துவாரங்களில் அடக்கிக் கொண்டு அச்சம் சிறிதும் இன்றிக் குண்டுக்கல் போல் நின்று கிடக்கும். கொடும்புலியின் கோரப் பற்களினாலும் வலிவுள்ள அதனை அறையினாலுங்கூடச் சிறிதேனும் அவ்வோடுகள் பழுதுரு வென்றால் அவற்றின் கனதி, உரம் முதலியவற்றைப் பற்றி அதிகமாகச் சொல்வானேன்?

ஆயினும் இவ்வாமைக்கு அதிமுக்கிய சத்துருக்கள் மூன்று. அதன் முதல் சத்துரு-எதினும் தலையிட்டு எதற்கும் இடரிழைத்து வரும் மனிதனே என்பது நாம் சொல்லாமலேவிளங்கும். ஆமையோ இவனை வறண்டி உபத்திரவம் செய்யாத தீங்கற்ற பிராணி யென்று அவன் நன்கறிவன். ஆதலின் அதனைத் தைரியமாய்க் கையால் எடுத்துச் சென்று வீட்டிற்குக் கொண்டு போவன். அதனைக் கொல்ல உளி முதலிய உபகரணங்கள் அவனுக்குப் பெரும் பஞ்சமல்லவே.

இதன் இரண்டாவது சத்துரு-வேட்டகரியை விழுங்கும் மோட்டு வயிற்றரவு. யானை சிங்கம் புலி முதலியவை படும் பாட்டில் அதற்கு ஆமை எம்மாத்திரம்? இப்பாம்பு முழுமூச்சில், உயிருடன் இருக்கும்பொழுதே அதனை உரம்மிக்க ஓட்டோடுங் கூட முழுசாக விழுங்கிக் கொல்லும்.

மூன்றாவது சத்துரு-"ஆடு கொல்லி" என்னும் ஒருவகைப் பெருங்கழுகு. இதற்கு இதன் மாமிசம் மிகப் பிரியம். ஆயினும் புலிப்பல்லுக்கு அசையாத அதன் புறத்தோடுகள் அதன் அலகிற்கும் நகத்திற்குமா அசையும்? ஆதலின் அது செய்யும் யுக்தியைப் பாருங்கள்! ஆமையை அது ஆகாயத்தில் வெகுதூரம் தூக்கிச்சென்று கடினமான கற்பாறையின் பேரில் கன வேகத்துடன் தொப்புத் தொப்பென்று போடும். எறும்பூரக் கற்குழியுமன்றோ? இவ்வாறு பன் முறை போடுவதால் ஆமையின் ஓடுகள் உடைந்து தசை கிளம்பக் கழுகு அதனைக் கொத்தியுண்டு வயிற்றை நிரப்பும். அபாயமின்றி உச்சீவிக்குமாயின், இவ்வாமைகள் சுமார் 200 வருஷகாலம் உயிரோடு இருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

(இன்னும் வரும்)

M. கோபாலகிருஷ்ணையர்,

அக்கிராசனாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம் மதுரை.

553

மனிதனது எழுகூறு.

(முன் தொடர்ச்சி)

இவ்விஷயத்தைப் பற்றி ஸ்ரீமதி. ஹெலேனாம்பாள் தான் அருளிச்செய்த மாயைத்திரை நீக்கம் என்னும் நூலில் இப்படிச்சொல்லுகின்றனள்:—" மனிதனுடைய சுபாவத்தில் ஒரு பாதியாகிய பிரகிருதி சுபாவத்திற்குச் சம்பந்தப் பட்டுள்ளது யூகம் என்பதொன்றும். (இதற்கு மதி என்றும் சொல்லுவார்கள்.) மனிதனுக்கு இந்த யூகம் ஒன்றுமே தாழ்ந்த பிராணிகளுக்கு மேல் தலைமைசாதித்து நிற்கவும் தன்னுடைய உபயோகங்களுக்குப் பிரகிருதியை வசப்படுத்திக் கீழ்ப்படிந்திருக்கும்படி செய்யவும் வல்லபங் கொடுக்கின்றது. அவனுடைய மனச்சாக்ஷி யென்பது அவனுடைய சுபாவத்தில் பரமார்த்தக் கூறு அல்லது ஆத்மக்கூறாகிய மற்றப்பாதியைச் சார்ந்தது. இந்த மனச் சாக்ஷியானது ஐம்புலன்களின் சதிமோச மயக்கங்களாகிய சுற்றுச் சுழற்சிகளுக்குள் அவனுக்குச் சற்றும் வழுவாத வழிகாட்டியாயிருக்கின்றது. ஏனெனில் மனச்சாக்ஷி யென்பது, குணம் குற்றம்-நன்மை தீமை-புண்ணியம் பாவம்-சரி தப்பு-நியாயம் அநியாயம்-நீதி தவறு என்பவைகளைக் கண்ட மாத்திரத்தில் யோசனையின்றிப் பகுத்தறிந்து தெரியும் அறிவேயாம். இப்படிக் கண்ட மாத்திரத்தில் அறிதல் பரம் அல்லது ஆத்துமா ஒன்றினால் மாத்திரமே முடியக்கூடியது. இந்த ஆத்துமாவனது ஈசுவரனது நிஷ்களங்க திருஞானத்தின் கூறானபடியால் அதுவும் சுட்டற்ற கேவல ஞானமும் பவித்திரமுமாம். இந்த மனச்சாட்சியின் பிரேரணைகள் யூகத்தைச் சார்ந்து நிற்பதன்று. அவைகள் யூகத்தைப் பொறுத்து நிற்காமல் அதைவிட்டு விலகித்தனியாய்ச்சுயம்பாய் இருப்பவைகளாம். நமது துவித சுபாவங்களில் தாழ்ந்ததரமான சுபாவத்தைச் சார்ந்தகவர்ச்சியினால் தளைபடாமலிருக்கும்போழுதுதான் அந்தமனச்சாட்சி தெளிவாய் விகசித்துப் பிரகாசிக்கும். யூகமானது நமது அன்னமயகோச மூளையின்பிரபாவம் அல்லது ஸம்ஸ்காரமானபடியாலும், அது முற் பிரதிக்கினைகளிலிருந்து அநுமான சித்தாந்தங்கள் செய்யும் சக்தி யென்று நியாயமாய் அதற்கிலக்கணஞ் சொல்லியிருப்பது போலவேயிருப்பதாலும், அது பூர

ணமாய் ஐம்புலன்களின் அத்தாக்ஷியையே முழுவதும் சார்ந்து நிற்ப தாலும் அது நமது தெய்வீக ஆத்தும சொரூபத்தை நேராகச் சார்ந்த குணமாகமாட்டாது. ஆத்துமாவானது அறிபொருள். ஆகையால் முன் பின் பார்த்து யோசித்துக் காரியா காரியங்களைச் சீர்தூக்கித் தர்க்கித்தல் என்னுஞ் செயலை உட்கொண்ட யூகம் அந்த ஆத்துமாவிற்குப் பயனற்றதாம். அதற்கு வேண்டிய அவசியமுமின்றும். ஞானசொரூபமாகிய நித்திய பரம்பொருளினின்றும் நேராகச் சுரந்து தோன்றிய வஸ்துவாக பாவிக்கவேண்டிய ஒரு பதார்த்தமானது அதனுடைய முதற்பொருள் அதாவது அது எந்த முழுமுதலின் ஒரு அம்சமோ அந்த முழுமுதல் என்னகுணங்கள் பொருந்தியிருக்கின்றதோ அதேகுணங்களைப் பொருந்தியிருப்பதாகக் கொள்ளவேண்டும். ஆகையால் பூர்வத்தில் "தியர்ஜிஸ்டுகள்" (Theurgists) என்று அழைக்கப்பட்டிருந்த சித்தர்கள் மனிதனில் பரமார்த்த பாகத்தைச்சார்ந்த பகுத்தறிவு என்னுங்கூறு (பரமாத்துமா) மனிதனுடைய தேகத்திற்குள் பூரணமாய் பிரவேசிக்கிறதேயில்லையென்றும் ஆனால் அது ஜீவன் அல்லது ஜீவாத்துமாவென்று சொல்லும்படியான ஒருபொருளின்மூலமாய் அவனைக் கவிழ்ந்து நிழலிட்டுக்கொண்டிக்கின்றதென்றும் இந்த ஜீவனானது தேகத்திற்கும் பரத்திற்கும் இடையிலிருந்து அவையிரண்டையும் சம்பந்தித்துவைக்கும் மத்தியகர்த்தாவென்றும் ஒருவித நியாயங்கொண்டு சாதித்தார்கள். பேரொளிசெய்யும் தனது ஆத்துமாவிலிருந்து நேராகப்பிரகாசம் பெறுவதற்குப்போதுமானபடி பிரகிருதியை வென்றுநிற்கும் புருஷன் சத்தியத்தை ஓதியுணராமல் இயற்கையாகவே தனக்குள் உணர்கின்றான். அவன் செய்யும் சித்தாந்தத்தில் பராமுகமானயூகம் என்னும் மதியானது போலிநியாயங்கள் விரோதமாக எவ்வளவு சொல்லினும் அவன் பிழையே செய்யமாட்டான். ஏனெனில் அவன் ஆத்துமப்பிரகாசம் பெற்றவனானபடியால். ஆகையால் தீர்க்கதரிசனம் வருங்காலஞானம் திரிகாலஞானம், தெருட்சி, ஈசுவரானுக்கிரகம் என்பதெல்லாம் நமது அழியாத நித்தியபரமாத்துமாவானது மேலிருந்து ஒளியைவீசி இப்படிப்பிரகாசஞ் செய்வதினாலாகும் காரிய சித்திகளேயாம்.

(இன்னும் வரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

பதினாறுபேறு.

நம் இந்துக்களுக்குள்ளே பெரியோர் சிறியோரை வாழ்த்திக் கூறுங்கால் "பதினாறும்பெற்றுப் பெருவாழ்வின் வாழ்ந்திரு" எனக் கூறுதல் யாவரும் அறிந்ததே. இங்ஙனம் பெரியார் கூறும் பதினாறு யாவை? பெருவாழ்வு யாது? என ஆராய்வாம்.

சாதாரண ஜனங்கள் பதினாறு எனற்கு பதினாறு புத்திரர்களை பெறுதல் எனவும், பெருவாழ்வு எனற்கு பெரிதான செல்வ வாழ்க்கையெனவும் கொள்கின்றனர். சாமான்ய படிப்புள்ள சில புலவரும் இவ்வாறே கொண்டு "மக்கள் பதினாறு பெற்று மங்காமல் வாழ்திரென்றார்" எனக்கூறியுள்ளார்.

இஃதென்ன விபரீதம்? ஒருவனுக்குப் பதினாறு பிள்ளைகள் பிறந்தால் அப்பிள்ளைகளைப்பெற்று வளர்த்துப் போற்றி வருதலில் எத்துணைப் பெரிய சங்கடங்களுண்டு? இப்பிள்ளைகட்கெல்லாம் நேரும் சுபாசுபக் கிரியைகளில் ஈடுபட்டு சதா மனக்கவலை யுடையோனாயிருக்கவேண்டுவதன்றி மன அமைதியும், சுகமும், ஆத்மஞான விசாரமும், ஈசுரோபாசனையும் பொருந்தி ஜநநஸாகரக் கரையேற வழியுண்டோ? ஒருவன் அறுபதினாயிரம் பிள்ளைகளைப் பெற்றான்- பதினாயிரம் பிள்ளைகளைப்பெற்றான்- நூறு பிள்ளைகளைப் பெற்றான்- எனக்கூறும் இதிகாச புராண வழக்குண்டேயென்னில், அதுசாதாரண சம்பவமன்றித் திருவருள் விசேடத்தால் நேர்ந்ததும் அங்ஙனம் நேர்ந்துழியும் அதனால் இறுதியாகத் துன்பமே கிடைத்ததென்பதும் பிரத்தியக்ஷமாம். அன்றியும் யாரோ ஒருவர் வெகு புத்திரப்பேற்றாற் சுகமுற்றிருப்பினும் அங்ஙனமாதல் சாதாரண சம்பவமல்லவென்பதும் அத்தகைய அபூர்வ விஷயமொன்றை வைத்துக்கொண்டு விவகரித்தல் கூடாதென்பதும் உணரத்தக்கனவே. குசேலர் வெகு புத்திரப்பேற்றாற் பட்டபாட்டைக் கேட்டுக் கவலைப் படாதார் யாவர்? ஒரு சிறிய கதை வருமாறு:—ஒரு புலவர் ஒரு பிரபுவிடஞ் சென்று தாமடைந்த வறுமையின் கொடுமையைப் பற்றிப் பலவாறு வர்ணித்து நெடுநேரங் கூறினாராம். பிரபுவோ வறு

மைப் புலவர் கூறியவற்றையெல்லாங்கேட்டு முடிவில் "ஐயா நம க்குப் பிள்ளைகள் எத்தனை பேர் ?" என்றாராம். புலவர் நகைத்து ஓ பிரபுவே! தாம் இவ்வாறு கேட்டதற்கு மிகவும் விசனிக்கின் றேன். ஏனெனில் எனது மிகக் கொடிய வறுமை முழுதுங்கேட்ட றிந்த பின்னர் பிள்ளைகளைப் பற்றிச் சங்கை கொள்ளவும் வேண் டுமா? குறைந்தது ஏழெட்டுச் சனியன்களாயினும் இருக்குமென்று தெரிந்துகொள்ள வேண்டாமா? என விடை பகர்ந்தார் என்பதே. உலக வழக்கத்தினும் நாலைந்து புத்திரர்களைப்பெற்ற ஒரு குடும்பஸ் தனைப் பற்றிப் பேசும் பொழுது "ஐயோ பாவம்! நாலைந்து பிள் ளை குட்டிக்காரன்-சமுசாரி" என்று இரக்கத்துடனே கூறுவதுண்டே இவ்வாறு கூறுவதன் கருத்தெல்லாம் பிள்ளைகளதிகமானால் துயரமு மதிகமாகும் என்பதுதானே. ஆதலின் பதினாறு என்பது பிள்ளை களைப் பற்றியதன்று, மற்றென்னையோ பொருளெனின்,

எல்லாமதத்தாரும் ஒப்பும்படி தமிழ் நூல்களில் பொதுவாகக் கூறுவன.

புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல் லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயி ன்மை, வாழ்நாள். எனப் பதினாறுமாம். இதனை,

துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவு தனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போகம் அறி வழகு
புதிதாம் பெருமை அறங் குல நோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

எனச்சிறிது வேறுவைத்துக் கூறுவாருமுண்டு. இங்ஙனம் கூறும் பதினாறும் எல்லாமதத்திற்கும் பொதுவாகும். ஆயினும் இவைகளெல்லாம் பொய்யான உலகசம்பந்தம்பற்றியனவேயன்றிப் பிறவிப்பிணியை நீக்கி வீடுபேற்றையளித்துக் காக்குந்தன்மையன வல்ல. ஆதலின் நங்குருமரபிற்கெல்லாம் முதற்குருநாதனான திரு நந்திதேவர் சிவபிரானிடத்து வேண்டிக்கொள்வன பதினாறுண்டு. அவை பின்வருங் கவிகளானறியற்பாலனவாம். இப்பரமாசாரியர் விரும்பிவேண்டிய பதினாறுமே யாம்பெறற் பாலனவென்பதும், அவற்றானே பெருவாழ்வு ஆகிய வீடுபேறு சித்திக்கும் என்பதும்,

ஆகவே "பதினறும்பெற்றுப் பெருவாழ்வின் வாழ்ந்திரு" என்பது இப்பொருளையே நன்கு விளக்குமென்பதும் காண்க.

திருநந்திதேவர் வேண்டிய பதினறுபேறு.

1. மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொறு மனமும்
[1]தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுருச் [2]சதுரும்
பிறவி தீர்தெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோ டுறவும்,

2. யாது நல்லன்பர் கேட்பினும் உதவுறும் இயல்பும்
மாத வத்தினேர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓதும் நல்லுப தேசமெய் உறுதியும் அன்பர்
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்,

3. மனமும் வாக்குநின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன தன்பருக் கடிமையாம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்,

4. தீமை ஆம்புறச் சமயங்கள் ஒழிந்திடுந் திறனும்
வாய்மை ஆகவே பிறர்பொருள் [3]விழைவுறு வளனும்
எமு றும்பர தாரம்நச் சிடாதநல் நோன்பும்
தூய்மை நெஞ்சின்யான் எனதெனுஞ் செருக்குருத் துறவும்;

5, துறக்கமீ துறையினும் நரகிற் றேயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணி சடைப்பெரும! இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

இவற்றையே யாமும் வேண்டிப்பெற்று உய்யக்கடவேம் சுபம்.

இங்ஙனம்,

முருகவேள்.

---

1 தறுகண்—அஞ்சாமை.

2 சதுர்—திறமை.

3 விழைவுறு—விரும்பாத.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41
560

சமாசாரக்கொத்து.

உலகத்தில் உள்ள 1000 பேர்களில்264 பேர்கள் எட்வர்ட் சக்கிரவர்த்தியின் பிரஜைகளே.

* * *

நீர்வாழும்பிராணிகளுக்குள் கணவாய்மீனுக்கே கண்பெரிது. நிலத்தில் சஞ்சரிப்பவைக்குள் ஒட்டகைச் சிவிங்கி, குதிரை ஆஸ்திரிச்சு ஆகிய இவைகளே பெருங்கண்கள் படைத்தவை.

* * *

உலகினிற்பழையமரம்:—1202-ம் வருஷம் பிரான்ஸ் தேசத்திலே அதனை ஆண்ட இரண்டாவது பிலிப் காலத்தில் ஓர் பிரபுவின் கல்லறையில் நடப்பெற்றஉடைமரம்ஒன்று நாளைவரைபட்டுப்போகாமல் ஏனையமரங்களைப் போல செழித்துச்சிறிதும் கேடுறாமல் இருக்கின்றதென்று அத்தேசத்து சர்க்கார் பத்திரத்தினால் தெரியவருகிறது. ஆதலின் அம்மரத்திற்கு இப்பொழுது சுமார் 704 வயது ஆகிறது. இதுவே உலகத்துள்ள மரங்களெல்லாவற்றினும் மிகப்பழமையானதாம்.

* * *

அமெரிகாவில் மின்சாரசக்தியின் உதவிகொண்டு பெரிய பால் வியாபாரிகள் தம் நூற்றுக் கணக்கான மாடுகளை 15 நிமிஷத்திற்குள்ளாகவே கறந்து போடுகிறார்கள். எவ்வாறெனில், போனகிராப் என்னும் ஒலிக்கருவிக்குள்ளதுபோல் கிளைகளையாக பல சிறுகுழாய்கள் பொருத்தப்பட்ட மிகப் பெரிய ரப்பர்க்குழாய் அவர்களிடம்உண்டு. இக்குழாய்கள்ஒவ்வொரு மாட்டின்மடியிலும்தனித்தனிஇறுகப்பொருத்தப்பட்டிருக்கும். மின்சாரயந்திரம் வேலை செய்யப்படும்பொழுது, மின்சாரசக்தி பசுக்களின் மடியின்மேல் தாக்க, பால் அவற்றினின்றும் பீறிட்டுச் சொரிய ஆரம்பிக்கும். இவ்வாறு பீறிடும் பால் நாம் முற்கூறிய சிறுகுழாய்களின் வழியாய்ப்பெருங்குழாய் போய்ச் சேர்ந்து அதனின்றும் ஓர் பிரமாண்டமான பாத்திரத்தில் ஏந்தப்படுமாம். ஈதென்ன புதுமை!

* * *

இப்பொழுது இந்தியாவில் சுற்றுப் பிரயாணத்திலிருக்கும் வேல்ஸ் இளவரசியார் நீந்துவதில் பேர்போனவர். இவர் தமது மக்களும் நீந்தித் தப்பக் கற்றுக் கொள்ளவேண்டு மென்று மிகப்பிரியப் படுகிறார்கள். நிற்க. நமது ராஜ சக்ரவர்த்தினியாகிய அலக்ஸாந்திரா மகாராணியாரும் அவ

துணிந்தனன் மறைபல தொடர்ந்து மெட்டா
அஃதெனக் கெட்டுமோ வந்தோ வந்தோ
விஃதொரு குற்ற மெனினும் பொறுத்தருள்
வயற்க ணெழுந்து வான்வளங் கண்டு
திரும்புதல் போலத் தேமலர்ச் சோலைக்
கொழுங்கனி நிறைந்த கொம்பர் வளையு
மக்குறிப் புணர்ந்தங் கடுத்து நின்ற
செந்நெலுங் கன்னலுந் திரண்ட தெங்கு
மரம்பையுங் கமுகு மம்மட் டடக்கிக்
காண்பா ருள்ளங் களிமகிழ் பூப்பச்
செய்சிவ காசித் திருநக ரமர்ந்த
பெரிய கோயிலிற் பேணு மன்பர்
மலப்பகை துமிக்க வளர்பெருங் கருணை
தருதடங் கண்ணித் தாயா முமையே. (12)

உமையனே கந்தரனே ருங்குழலா*புங்க
ணமையனே கந்தரநீ யின்று-மமையங்
தெரிந்துகா வாய்சிவகா சிக்கட் சிறிதும்
பரிந்துகா வாயேன் பகை. (13)

பகற்பஞ்ச மன்ன மிராப்பஞ்ச மாதரிப் பாடொருவி
யிகற்பஞ் சரமல ருஞ்சிவ காசி யினிலிருந்து
விகற்பஞ் சமரச மாக்கொள்வ தெந்த விதம்புகல
துகற்பஞ் சகலமுந் தானஞ் சிவனுருத் தோயமுதே. (14)

தோய நிறைமலர் துவன்று பொய்கையின்
வாயமர் வாளை மகிழ்ந்து துள்ளிமேற்
பாய்ந்துதம் மினமெனப் படும்விண் மீன்களை
யாய்ந்துகே டொன்று மாற்று தகன்று
வரும்போ தெதிரே மானச வாவி
விரும்பி யேகும் வெண்குரு கன்னந்
தம்மைத் தம்மினந் தம்மை யருந்தும்

*உங்கண்—உவ்விடம்,

வெம்மைப் பகையென வெகுண்டு சாடிச்
சிறையினை முறித்துச் செகுத்து மீண்டுகீ
ழுறைதரு பூம்பொழி லூடு புக்குக்
கறுவொடு சீறிக் காரண மின்றி
யுறுபெரும் பலாவி னொண்பழங் கிழிக்க
வொழுகு செந்தே னோடிப் பாயுஞ்
செழுநிலப் பரப்பின் றேத்தெ லாந்தன்
மெய்ந்நிறங் காட்டி மேலை வானோ
ருய்ந்நிலம் போல வொளிருங் கவின்மிக
லாஞ்சிவ காசி யகத்துண் முளைத்துப்
பூஞ்சினை பொதுளும் பூவுந் தேனுந்
தளிருஞ் சொரிந்தர்ச் சனைசெய் வார்போற்
களிமகிழ் கொண்டுட் கனிந்து நின்று
தராதலம் புகழத் தழையும் வில்வப்
பராரையு ளிருந்தருள் பரப்பி னின்னை
யராவணி முதலிய வகற்றி மதுரையில்
விராவு மணஞ்செய் விசுவ நாதர்க்
காயினு மவர்முத லாய வானவர்
மீயுயர் பசும்பொன் விண்ணினு மண்ணினு
மெடுத்த காரிய மிடையூ றின்றி
யடுத்தினி தென்று மாக்க மாக
முந்திப் பூசை முடிக்கு மைங்கரத்
தந்திக் கார்முகத் தம்பிராற் கேனுங்
கடவுள ருலகங் கைவிட் டோட
விடர்பல விளைக்கு மிருபே ருருவி
னொருபே ரியாக்கை யுற்றுப் பிரமன்
றிருமான் முன்னோர் செற்றற் கரிய
வீர வன்ம மிகவீற் றிருந்த
சூர பன்மன் றொக்க பண்புப்
யெரா பெனன்னப் பேசின ரெல்லாந்
துயரா தும்மைத் தொகைப்பெய ரானெனச்
செய்யும் வேலாற் றிறனி லுயர்ந்த

பங்கவரை யொறுத்துப் பகைவரை யறுத்த
தொகைவரை யில்லாத் தூய முனிவ
ராதியோ ருவகை யமையவைத் தருள்செஞ்
சோதியாஞ் செந்தற் றேன்றற் கேனுங்
கடன்மலை முதலாங் காரியப் பொருள்க
ளுடனெருங் கழியும் யுகாந்தகா லத்து
மசல மெனும்பே ரமைதலெஞ் ஞான்று
நிசமென வொருநிலை நிற்குங் கைலை
மால்வரைக் கோயில் வாயில் காக்குஞ்
சால்பினிற் சிறந்த தலைமை யெய்திச்
சிந்தியா நின்று திருவருட் பணிசெய்
நந்தி யாங்கண நாதர்க் கேனு
மொருசொற் சொன்ன வுவகை பூத்தருட்
குருவுருக் கோலங் கொண்டெழுந் தருளியென்
முன்பு நின்று முன்னிய வெல்லா
மன்பி னருளி யாணவ மாயை
கன்ம மாகிய கடல்கடப் பித்தினிச்
சென்ம மெய்தாத் திறனுறு தொல்சீர்க்
கரையிலா முத்திக் கரையுங் காட்டுவர்
வரையர சீன்ற மாமடப் பிடியே
தவளவொண் முத்தந் தயங்கு மூரற்
பவளவாய்க் கிளியே பண்ணிசைக் குயிலே
சிவமணங் கமழுந் தெய்வப் பூவே
நவநவ மினிக்கு நற்பெருந் தேனே
சுரும்பே யைம்பாற் றூய பாகே
கரும்பே யமுதே கண்ணே கண்ணி
னொளியே வெளியே யுலாவு கின்ற
வளியே கனலே வயங்கும் புனலே
நிலனே கதிரே நிலவே யுயிரே
பலனு மதுரம் பழுத்துக் கனியும்
பச்சிளங் கனியே பசும்பொற் றொடியே
மெய்ச்சுளங் கருதுவார் வேண்டிய வடிவாய்க்

கருணை புரிதடங் கண்ணித் தாயே
யிருணிறை நெஞ்சத் தெளிய னேன்பொருட்
டிவளவு சிரமநீ யெடுப்பதெற் றுக்குநின்
றிவளரு நெஞ்சிற் சிறிது நினைக்கினும்
போதும் போதும் போது
மாதலி னஃதே யருள்புரி வாயே. (15)

ஆயிரங்கா தஞ்சென் றலைந்தாலு மாம்பயனென்
னீயிரங்கா தஞ்செம்மை நீக்கினற்—றாயிரங்காச்
சின்னஞ் சிறுவா ... ற் சீர்ச்சிவகா சிச்சிவையே
யின்னஞ்சி றன்பமெய்து வேம். (16)

ஏமாந் தருந்தற் குணவுமில் லாதலைந் தெய்த்துவிட்டீர்
பூமாந் தரும்விண் புலவரும் போற்றும் புராதனியாந்
தேமாந் தருநிறை யுஞ்சிவ காசிச் சிவையுமைகண்
டாமாந் தருண மிதுவென் றருளுவ ளங்கெய்துமே. (17)

அங்கங் கதுவது வாகி யெந்த
வுயிர்தொறு மிருந்தவ் வுயிர்கள் செய்யு
மிருவினைப் பகுதிக் கேற்ற வாறு
தநுகர ணங்க டந்து பின்னர்ப்
புவன மளித்துப் போக மூட்டுவை
யிஃதரி தன்றியா னென்ன செயினு
மொன்றுங் குறியா துயர்சிவா னந்த
வாரியு ளமிழ்த்தி மயலுறு துக்க
மென்பது தெரியா தியங்கு மாறு
செய்வ தன்றே செயற்கருஞ் செய்கை
யஃதே நின்னருட் கழகுபே ராண்மை
புண்ணியம் புகழென் புந்திக் கினிக்கு
மருமருந் தேயென் னருமைத் தாயே
கருணை முகிலே கற்பகக் கனியே
பழுத்த தொண்டர் பாடற் சுவையே
பூதி கண்டிகை பொருளெனக் கொண்ட

வடியார் குழாத்து ளடிய னேனையுங்
கூட்டி வைத்த குணப்பெருங் குன்றே
யொன்றே பலவே யொளியே யிருளே
நன்றே தீதே நான்மறைத் தெளிவே
யரியராங் கணேசரோ டாறு மாமுகப்
பெரியரைச் சிறுவராப் பெற்ற பேறே
முத்தே பவளமே மூவருந் தோற்றும்
வித்தே சித்தே மெய்ப்பொரு ளேயென்
றெத்தே சத்து மெக்கா லத்தும்
பேசப் பட்டும் பேச்சற நின்று
மதீத மாகி யற்புதம் பயக்குஞ்
சச்சிதா னந்தத் தனிப்பெரு வாழ்வே
கொண்டல்கண் படுக்குங் குரூஉச்சுடர் கொழிக்கு
மணிகள் பதித்த மாடம் பற்பல
விந்திரன் சிறையறுத் திட்ட வரைக
டிரண்டுவந் திருந்தச் சிறைபெறும் பொருட்டுத்
தவநனி புரியுந் தன்மை யான
வீதி தோறும் விளங்கா நிற்குஞ்
சீர்தரு சிவகா சிப்பதி
யார்தடங் கண்ணி யாமம் பிகையே. (18)

அம்பிகைத்தாய் பாத மருஞ்சன்ம வாழிக்கோ
ரம்பிகைத்தாய் நெஞ்சே யதையெதைநீ—நம்பிக்
கரையேறு வாய்சிவ காசியிலென் காதிற்
கரையே றுயரொன் றுங் காண். (19)

காணிக்கை யோர்சிறு காசுந் தரார்தொண்டர் காணுமன்பாம்
ஆணிக்கை யோசற்று நில்லா ரவருற வற்று நினைப்
பேணிக்கை யோஞ்சிவ காசிச் சிவனெம் பிரானெடுநீ
பாணிக்கை யோதெம்முன் வந்தே யருளப் பராபரையே. (20)

பராசரன் மதலை பண்டை நான்மறை
வியாசப் படுத்தி மெய்ப்பொருள் கண்டு

பகரும் புராணம் பதினெட் டுள்ளு
மையிரு புராண மன்புட ஞேதி
யுன்பெருங் கணவனே யுயரும் பிரம
மென்றனன் மெய்ம்மறந் தெல்லா முனிவரும்
புகுந்து கேட்கும் போது பிரம
முகுந்தனே யென்று முன்கை யுயர்த்தின
னக்கை தம்பித் தாங்கு நிற்ப
நந்தி சபித்தஞ் ஞான முனிவர்க்
குண்மை யுணர்த்து முவமை யில்லாக்
காசியி னுயர்சிவ காசிநன் னகர
வாசி யாகி வருணைச் சிரம
வொழுக்கந் தவறு துளுற்று வித்துத்
தொண்டர் தம்மனத் துயர மகற்றி
வீற்றிருந் தருளு மெய்த்தடங் கண்ணியுன்
பாற்றினந் தொழுது பாமலர் சூட்டிப்
போற்றி யடியேன் புகலும்விண் ணப்ப
மென்றுநின் றரிசன மிடையூ றின்றி
நன்று கிடைக்க நாவினைப் பாடக்
கண்கள் காணக் கரமஞ் சலிக்க
வுள்ளு முருக வுரோமஞ் சிலிர்ப்பச்
செவிக ளென்று நின் சீர்த்தி கேட்கத்
தலைகுனிந் திறைஞ்சத் தாள்வலஞ் சூழப்
பரவச மெய்தப் படுதலு மதான்று
வறுமைநோய் மாதர் மயற்குட் பட்டுச்
சிறுமை வஞ்சந் தீமை செய்தல்
பிறர்பொருள் வெளவல் பிறர்மனை யிரும்பல்
கொலைகள வியற்றல்சற் குருவைநிந் தித்தல்
பொய்சொல லாதியாம் பொல்லாங் கென்பன
வின்னு முளவெலா மியற்று திருத்தலு
மஞ்செழுத் துட்பொரு ளனைத்துந் தெரிந்து
நெஞ்சழுத் திப்பயி னிலைபெய ராமற்

செபதவ தியானஞ் செய்துளங் களிகூர்
நின்னடி யாரொடு மேயங் கொடுசிவ
புராணம் படித்துப் பொழுது போக்கலும்
வேண்டும் வேண்டும் வேண்டு
மீண்டருண் மறவே னிவ்வுத வியையே. (21)

இவ்வையமேற் றிட்டி யிருந்துநிற்பார்த் தேயிறைஞ்சார்
வெளவையமேற் றிட்டியங்க வைத்துவிடுங்—கொவ்வைவாய்க்
காமக்கோட் டத்திசிவ காசியினிற் கைதொழுதே
*நாமக்கோட் டத்திசையே நாம். (22)

நாம்பாடு மாறருள் செய்தனை யேயிந்த நன்றிகொன்று
லாம்பாடு மாற்றுவ ரார்சிவ காசியி லன்†றோர்முனி
‡யோம்பாடு மாமயி லூர்மகப் பேறெய்த வொண்சடையிற்
பாம்பாடு மாண்புறு மெந்தையை வேட்ட பசுங்கிளியே. (23)

பசுமரத் தாணி பதிந்தாற் போலு
மன்ப ரன்பி னழுந்து மரகத
மணியே பவள வரையி லமர்ந்து
களிகூர் தருமிளங் கலாப மஃபில்போ
லளிகூ ரெம்பிரா னாக மதனிற்
கலந்து மகிழ்தடங் கண்ணி யுமையே
யலந்து வந்தன னடிய னேனையு
நின்பணி செய்ய நியமித் திடுவா
யென்று பஃறா மிறைஞ்சி நிற்கவும்
பாரார் போலப் பராமுகஞ் செய்தனை
யாலோ சிக்கி லாயிரக் கணக்கிற்
றெண்ட ருள்ளார் தொகைக்கடங் காம
லிவனெற் றுக்கென் றிருந்தனை போலு
மங்ஙன மாயி னணுவுங் கூலி
யின்றிநின் னேவ லெல்லாஞ் செய்வ

* நாமக்கோட்டத்து—அச்சத்தைத்தருங் கிரகங்களால் வரும் விபத்து.

† ஓர்முனி—நாரதர். ‡ ஓம்புதல்—உண்டாக்கல்

விதற்குந் தடையா தென்னினு மௌனஞ்
சாதிக் கின்றுய் தண்ணளிக் கழகோ
வென்றின் னங்கே ளுனக்கு வேண்டா
வாயினு நின்னடி யாருக் கேனு
மடிமை செய்ய வாக்கு தற்கும்
வருத்த முண்டோ வலியவந் ததனு
லவமதித் தனைகொ லணிமதி லமர
ரூரினை யளக்க வுயர்சிவ காசி
நகரிலொ[illegible] ஞான்று நட்புறு நினது
நாதராம் விசுவ[illegible] தரிவ் வாறு
தள்ளுதல் செய்யார் தடுத்தாட் கொண்டுமுன்
னொருவனைத் தம்பணி யுஞற்று வித்தற்
பொருட்டவன் மாதர்பாற் போகவேவிய
சந்து போய்ப் போய்த் தனிநான் மறையு
மாயனு முணரா மலர்ப்பத நோவ
மீண்டு வந்து விளம்பின ரதான்று
குருந்த நீழலிற் குருவுருக் கொடுவந்
தொருவனைத் தேடி யுபதேசித்து
மறையவ னறியா வன்சடை முடிமேன்
மண்சுமை யெடுத்து வன்பிரம் படியும்
பட்டன ரதான்றோர் பாணனுக் காக
விறகு வெட்டி வீதியிற் சுமந்தன
ரிம்மட் டோமற் றின்னு மெத்தனை
யத்தனை யுஞ்சொலற் காற்ற லில்லேன்
சொல்லினங் கேள்வனைத் தூற்றி னனெனக்
கோபங் கொளினுங் கொள்வை யாதலி
னஞ்சி யொடுங்கிநின் னடிமலர்க் காட்சி
கண்டு நின்றனன் கடைக்கணித் தருளே. (24)

கடைக்கணிக்குமுத்தேர்ச்சீர் காட்டுசிவ காசி
யிடைக்கணிக்கு முத்தேச மின்பங்-தொடைக்குழல்கொள்
சங்கரிய தோர்ந்துநீ தண்ணளியாற் றந்தருளீ
திங்கரிய தோசொல் லெனக்கு. (25)

என்பாடலங்க முருக்குவ தாயினு மேற்பவரார்
நன்பாட லங்கனி யுஞ்சிவ காசி நகரினைநீ
முன்பாட லங்கட்கு மேலெனக் கொண்டுநின் முக்கண்ணிறை
யன்பாட லங்கருட் பார்வையி னுற்கண் டருளனையே. (26)

அன்னையே மக்களை யடுக்குந் துன்பந்
தன்னை யகற்றித் தந்தை தன்னொடு
சேர்ப்பது போலத் திகழைந் தெழுத்துட்
பார்ப்பவ ரறியும் பான்மைத் தாயிடை
யகர வடிவ மான்மா வமர
நகர மகர நாம ரூப
மலங்க ளதன்பின் வைக வதன்முன்
பலன்றரு வகரப் படிவ மாக
நீயமர்ந் திருக்க நின்முன் சிகர
மாய வடிவினின் னன்ப ராமிறை
யிருக்க நீபின் னிரண்டையு மகற்றி
யுருக்கமோ டுயிரை யுயரவ் விறையுட
னிரண்டறச் சேர்ப்பித் திடுமுறை கண்டே
மந்தண மீதுநின் மான்மியஞ் சற்று
மெந்த வுலகினு மியம்பவல் லவரார்
திருமால் பிரமன் றேவ ரவர்தம்
பெருமா னாதியர் பிறங்கு பதவியுந்
தரினும் வேண்டேந் தாமே யிங்கவை
வரினுங் கொள்ளே மற்றென் னென்று
மின்றி யமையா விடம்பொரு ளேவ
லென்றிம் மூன்று மியலு மவரவர்
தகுதிக் கேற்பத் தருதல் வேண்டு
மிகுதி யாக வேண்டு கில்லேஞ்
சிறிதுகுன் றினுநின் றிருப்பணி செய்தல்
வறிது போமென வருத்த முற்றுக்
கேட்டன மஃதுங் கிளர்நின் ஞான
நாட்டந் தனக்கு நன்குதெரியும்

578

வேட்டன யாவு மிகவு நல்கும்
பாட்டளி யுள்ளே பயில்கற் பகமே
சிந்தா மணியே தெய்வத் தேனுவே
யெந்தா யாகி யிமயர சனுக்குஞ்
செழியன் றனக்குந் திருமக ளாகி
யழிவிலாத வருள்பொழி புயலே
பாடும் புலவர் பரிசு பெறற்குத்
தேடுஞ் செல்வச் சிறப்பு வாய்ந்த
ககனமும் புகழுஞ்சிவ காசி
நகரில் வைகு நங்கை யமுதே. (27)

நங்காயந் தோயமனார் நண்ணுமுன்னின் னற்பதநீர்
நங்காயந் தோயமன நல்குமா றங்காய்கார்ச்
செல்வந்தா ராய்காச் சிவகாசி சேரர்க்குச்
செல்வந்தா ராயோநீ செப்பு. (28)

செப்பந் தருவதின் றேனுமென் பாக்கொள் சிலந்திசெயு
மப்பந் தருமுவந் தார்நின் கணவ ரலர்நிறைபூங்
கொப்பந் தருமலி யுஞ்சிவ காசிப்பைங் கோகிலமே
யொப்*பந்த ருற்றநின் றாண்மல ரேயெற் கொருதுணையே. (29)

ஒருவனாய் நின்றாற் கொருத்தி யாகி
வருமருந் துணையே மலரவ னாதி
யைவரா னார்க்கு மைந்து சத்தியாய்க்
கைவரு மொருபெருங் கருணைக் கடலே
தோன்றிய காரியந் தோன்றா முறையே
யூன்றியுள் ளொடுங்கு முவமை யில்லாக்
காரண முதலே காட்சிக் கெட்டா
வாரண முடிவே யாகம வடிவே
யத்து வாக்க ளாறையுங் கடந்த
தத்துவா தீதத் தற்பரம் பொருளே

* அந்தர்—மறைவு.

மயல்லா மாகி யில்லது மாகி
நல்லார் காண நணுகிப் பொல்லார்
தெரிதற் கரிதாய்ச் சிதாகா சத்தின்
விரிவிற் பெரிதாய் விளங்கும் விளக்கே
கடல் கடைந் திடுநாட் கடவுளர் கண்முற்
படவெழுந் தெதிர்ந்த பைந்துழாய்ப் பகவன்
வெண்ணிறங் கருநிற மேவக் கணத்திற்
பண்ணிய விடத்தைப் பரத்தி னுண்மை
காண்பார் காணக் கையில் வாங்கி
மாண்பார் நீயுள மகிழு மகிழ்ந
ருண்ட போதஃ துள்ளிறங் காமற்
கண்டமட் டமையக் கையாற் பிடித்து
நிறுத்திவைத் தங்கு நின்ற வர்க்கறி
வுறுத்தி யிந்திரை யாண்மலர் வாணி
யரம்பையர் சசிமுத லாய மாதர்
வரம்பி றெய்வ மங்கலங் காத்த
வற்புதப் பெரும்பே ரரசிநின் பெருமை
சொற்பயி னுன்மறை சொல்லற் கடங்கா
தென்னிலென் னுவோ விசைக்க வல்லது
நின்னி லென்று நிறுத்தின னின்பாற்
பாடிப் பாடிப் பற்பல பகர்ந்தென்
றேடித் தேடிச் சிக்கெனக் கண்டதா
லொன்றே வேண்டு மொன்று நன்றஃ
தின்றே வேண்டு மின்று மின்னே
வேண்டுமஃ தியாதேல் விளம்புவன் கேணீ
யாண்டு வீற்றிருந் தருள்சிவ காசிமுற்
பாதி மயமாப் பண்ணப்
பூதி முன்னம் போந்தருள் வதுவே. (30)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.